# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு2029பங்குனி 19 (02-04-1998)வியாழக்கிழமை UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:108


# புத்தாண்டு தினத்தைமுன்னிட்டு

# கொழும்பில் பாதுகாப்பு தீவிரம்!

## நேற்றும் நூற்றுக்கணக்கான தமிழர் கைதாகி விசாரணை

கொழும்பு, ஏப்ரல் 2

கொழும்பு நகரில் புத்தாண்டு காலத்தில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற புலனாய்வுத் தகவலையடுத்து நகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. தமிழர் செறிந்து வாழும் பகுதிகளில் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டு பெண் பொலீஸார் ஆயுதங்களுடன் காவலுக்கு நிறுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பு நகரில் என்றுமில்லாத அளவு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஏராளமான படையினரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

இரவு நேரங்களில் சிறுசிறு ஒழுங்கைகளில் கூட படையினரின் ரோந்து இடம்பெறுகிறது.

அதேசமயம் கொழும்பு நகர் நேற்று 2 ஆவது நாளாக படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு சுமார் 2 ஆயிரம் தமிழர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் இரவு 10 மணி முதல் நேற்று அதிகாலை வரை பெரிய எடுப்பில் பொலீஸார், இராணுவத்தினர், கடற்படையினர், விமானப்படையினர் ஆகியோரால் கொச்சிக்கடை, கொட்டாஞ்சேனை, செட்டித்தெரு, செக்கடித்தெரு, கெட்டியாவத்தை ஆகிய பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் இடம்பெற்றது.

தமிழர், முஸ்லிம்கள் என சுமார் 2 ஆயிரம் பேர் கைது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ரயிலில் வருவோர் கோட்டையில் கைது

கொழும்பு, ஏப். 2

வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களில் இருந்து நேற்றுக் காலை கொழும்பு வந்த ரயில்களில் தமிழ் இளைஞர், யுவதிகள் கைது செய்யப்பட்டனர்.

கோட்டை ரயில் நிலையத்தில் அவர்கள் வந்து இறங்கியதும், படையினர் தமிழர்களை விசேடமாக விசாரணை செய்ததாகவும்—

27 பேர் கைது செய்யப்பட்டு பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் கோட்டை ரயில் நிலையத்தில் வந்திறங்கிய 300 தமிழர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

(இ-3)

## படையினர் தொடர்ந்து விளக்க மறியலில்

யாழ்ப்பாணம், ஏப். 2

கடந்த நவம்பர் மாதம் அச்சுவேலி வாதரவத்தையில் இருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 16 இராணுவத்தினரும் நேற்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அதி பாதுகாப்பு வலயம் மீது நேற்று மோட்டார் தாக்குதல்

மட்டக்களப்பு நகரிலுள்ள அதி பாதுகாப்பு வலயம் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதல் நடத்தினர்.

இராணுவக் கட்டுப்பாடு அற்ற பிரதேசமான கன்னன்குடாவிலிருந்து இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

பாதுகாப்பு வலயத்தில் உள்ள 3 ஆம் பிரிகேட், தேசியத் துணைப்படை முகாம், தேசிய புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றை நோக்கி இத்தாக்குதலைப் புலிகள் நடத்தினர்.

இராணுவத் தரப்பிலிருந்தும் பதில் தாக்குதல்கள் இடம்பெற்றன.

சேத விவரங்ள் தெரியவரவில்லை. (இ-21)

## வடக்கு மீனவர் பிரச்சினை குறித்து நாளை ஜனாதிபதியுடன் சந்திப்பு

### தமிழ்க் கட்சிகள் ஏற்பாடு

கொழும்பு, ஏப். 2

வடக்கில் மீனவர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளுக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் நாளை பேச்சுவார்த்தை இடம்பெறவிருக்கிறது.

சுழிபுரம், காரைநகர் பகுதிகளில் மீன் பிடிக்க விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு ரெலோ ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது.

ஜனாதிபதி இதற்கு நேற்று அனுப்பியுள்ள பதிலில் நாளை தமிழ்க்கட்சிகளுடன் மீனவர் பிரச்சினை குறித்துப் பேசச் சம்மதம் தெரிவித்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது, மீனவர்களின் மீன் பிடிப்பு நேரம், தூரம் ஆகியவற்றை அதிகரிப்பது தொடர்பாகப் பேசப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது (இ-3)

### மீனவர் போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 2

சுழிபுரம், பொன்னாலைப் பகுதியில் மீன்பிடிக்க விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கக்கோரி அப்பகுதி மீனவர்கள் அடையாள உண்ணா

(10 ஆம் பக்கம் பார்க்க)

### வடமராட்சி கிழக்கிலிருந்து:

## படையினர் திரும்பும்போது குண்டுவெடிப்புச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 2

வடமராட்சி கிழக்குநாகர்கோயில், அம்பன் பகுதிகளில் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையை முடித்துக்கொண்டு படையினர் திரும்பும்போது குண்டு ஒன்று வெடித்ததில் 4 படையினர் காயமடைந்தனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் நண்பகல் 12-20 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

காயமடைந்த 4 படையினரும் உடன் பலாலி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். (இ-3)

## கால்நடையாகச் சென்ற படையினர் மீது தாக்குதல்

### வாழைச்சேனையில் சம்பவம்

மட்டக்களப்பு, ஏப். 2

மட்டக்களப்பு - வாழைச்சேனையில் பேத்தாளையில் நேற்று முன்தினம் இரவு கால் நடையாகச் சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் அதிகாரி உட்பட மூன்று படையினர் காயமடைந்தனர்.

இதனையடுத்து நேற்றுக்காலை வாழைச்சேனை நகரம் மற்றும் 7 கிராமங்கள் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டன.

இந்தச் சுற்றிவளைப்பின் போது 500 பேர் கைது செய்யப்பட்டு பொது இடத்தில் வைத்து விசாரிக்கப்பட்டனர்.

இவர்கள் விடுவிக்கப்பட்டார்களா என்பது தெரியவரவில்லை. (இ 3-21)

## படையினர் நிலை குறித்து தலைமை ஆராய்கிறது

### தளுவத்தயுத்தமுனை விஜயம்

வவுனியா, ஏப். 2

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையின் தற்போதைய நிலை குறித்து ஸ்ரீலங்கா படைத் தலைமை ஆராய்வதாக இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இராணுவத் தளபதி றொஹான் தளுவத்த உட்பட பல உயர் தளபதிகள் கடந்த வியாழக்கிழமை போர் முனைக்கு விஜயம் செய்தனர்.

அந்த விஜயத்தின் போது படையினரின் நகர்வு எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டது.

சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் வடக்குக்கானதரை வழிப் பாதையைத் திறப்பதற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்ததும் —

அதில் தற்பொழுது தடங்கல்ஏற்பட்டிருப்பதும் தெரிந்தவையே. (இ-3)



அப்ப புத்தாண்டு ''கலகலப்பு'' கொழும்பில் இப்பவே ஆரம்பம் எண்டு சொல்லுங்கோ...!

## தமிழர் கைதாவதை தடுக்கக் கோரிக்கை

கொழும்பு, ஏப். 2

''தலைநகர் கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் தமிழ் இளைஞர், யுவதிகள் தொடர்ந்து வகை தொகையின்றிக் கைது செய்யப்படுவதை நிறுத்த மாற்று ஏற்பாடு ஏதாவது செய்ய வேண்டும்''.

இப்படி பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி விசாலாட்சி துரையப்பா

சுருவிலைச் சேர்ந்த திருமதி விசாலாட்சி துரையப்பா அவர்கள் 01 - 04 - 98 இல் வவுனியாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சோமசுந்தரம் — பொன்னம்மா தம்பதிகளின் அருமை மகளும், காலஞ்சென்ற துரையப்பாவின் அன்பு மனைவியும், சரஸ்வதி (சுவிஸ்), அன்னலெட்சுமி (வவுனியா), அழகேஸ்வரி (வவுனியா), பரமேஸ்வரி (ஆசிரியை, பெரியபுலம் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்), தர்மலெட்சுமி, பூபாலசிங்கம் (உரிமையாளர், சிங்கம் றேட்ஸ், வவுனியா), தனபாலசிங்கம் (வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற துரைசாமி, காலஞ்சென்ற கந்தவேள், கந்தசாமி (வவுனியா), இராசலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சூரியகுமார் (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), யுலிற்றா கரோலின் (வவுனியா), சரோஜினிதேவி (வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சபாரெத்தினம் (உரிமையாளர், லோகராஜா ஸ்ரோர்ஸ், கொழும்பு) அவர்களின் அருமைச் சகோதரியும், வதனி (பிரான்ஸ்), மேகலா (சுவிஸ்), கிருபாளினி (பிரான்ஸ்), சேயோன் (சுவிஸ்), துஷ்யந்தி (சுவிஸ்), தேவிகா (ஆசிரியை, வவுனியா), தர்ஷினி (சுவிஸ்), ராஜினி (ஆசிரியை வவுனியா), தயாபரன் (சுவிஸ்), நவநீதன் (கொழும்பு பல்கலைக்கழக மாணவன்), அனுஷா (ஜேர்மனி), கிரிஷா (கொழும்பு), வனஜா (வவுனியா), றேணுஷா (வவுனியா), பவான், வித்தகன் (மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி), தினேஷ்குமார் (மாணவன், யாழ், இந்துக் கல்லூரி), பிரதீபா (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவி), கார்த்திகா (வேம்படி மகளிர் கல்லூரி மாணவி), கிருஷாந், லச்ஷிகா, ராஜ்குமார், கிரிஷாந்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02-04-98) வவுனியாவில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கோ. இராசலிங்கம் (ஆசிரியர்)
ந. சூரியகுமார்
(மருமக்கள்)

70, 68 அச்சுக்கூட வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(54539)

## கந்தையா இராஜரட்ணம்

(O.I.C. சிறைச்சாலை)

கருகம்பனையைப் பிறப்பிடமாகவும், கொல்லங்கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய சிறைச்சாலை பொறுப்பதிகாரி கந்தையா இராஜரட்ணம் 01-04-1998 அன்று சாவகச்சேரியில் காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், பரமேஸ்வரியின் (கனடா) அன்புச் சகோதரனும், இராஜரஞ்சினி (ஆசிரியை, யா/டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி), இராஜரஞ்சன் (சிறைச்சாலை உத்தியோகத்தர், திருகோணமலை), இராஜசேகரன் (சிறைச்சாலை உத்தியோகத்தர், மட்டக்களப்பு), இராஜராகினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகானந்தம் (செயல்திட்ட உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சாவகச்சேரி), புஸ்பராணி, சுகிர்தகலா, சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், காலஞ் சென்றவர்களான உமாபதிசிவம், V. T. நடராஜா (இளைப்பாறிய ஆசிரியர்) மற்றும் திருமதி இரத்தினசிங்கம் பரிபூரணந்தம் (இளைப்பாறிய ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனரும், அர்ச்சனா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி), புஸ்பராகவன், ரஞ்சிதா, தர்ஷனா, கோபிராஜ், அர்ஜீன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 05-04-98 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
திருமதி இராஜரஞ்சினி யோகானந்தம்
(மகள்)

16, கந்தையா வீதி,
சாவகச்சேரி.
(54542)

## சின்னப்பு இராசையா

கரந்தன் நீர்வேலியை வசிப்பிடமாகக் கொண்ட சின்னப்பு இராசையா 01 — 04 — 1998 அன்று காலமானார்.

அன்னார் இ. இராசம்மாவின் கணவரும், காலஞ்சென்றவர்களான சி. இராசம்மா, க. நடராசா மற்றும் க. பூபாலராசா, க. இராமர், க. இலச்சுமணன் ஆகியோரின் சகோதரரும், இ. நாகராசா, ச. நாகேஸ்வரி, இ. பாலச்சந்திரன் (ஹொலன்ட்), க. கலாநிதி, இ. பாலகிருஷ்ணன் (இத்தாலி), இ. பாஸ்கரன் (ஜேர்மனி), தயாநிதி, பத்மாநிதி (கனடா) ஆகியோரின் தந்தையாரும், தர்மசாந்தா, காலஞ்சென்ற ந. சண்முகலிங்கம் மற்றும் சி. கனகலிங்கம், அருந்ததி, ஜெயசீலன், ஜெயா, ஜெசிந்தா, பொ. விஜயகாந்தன் (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02 — 04 — 1998 இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் இளங்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
இ. நாகராசா
(மகன்)

கரந்தன்,
நீர்வேலி.
(54532)

## பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஏப். 2

நகர்ப்புற அடிப்படை சேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ். மாநகர சபை சுகாதாரப் பகுதியினர் நடத்தும் சுகாதாரத்தொண்டர்களுக்கான மூன்று நாள் மீளாக்கல் நலவியல் பயிற்சி நேற்று ஆரம்பமானது.

ஐ. நா. சனத்தொகை நிதியத்தின் ஆதரவுடன் நடத்தப்படும் இப் பயிற்சி நெறி நாளை 3 ஆம் திகதி வரை நடைபெறும். (இ-5)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 2

கொய்யாத்தோட்ட சன சமூக நிலைய முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு நிகழ்வு இன்று வியாழக்கிழமை மாலை 2.00 மணிக்கு நடைபெறும். இந் நிகழ்வில் யாழ். பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ-9)


எமது புதிய
வெளியீடு!
சரத்பாபு - சுஹாஷினி
நடித்த
உயிரினும் மேலாக

எமது அடுத்த
வெளியீடு!
சிங்கம் ஒன்று
புறப்பட்டது

சுப்பஸோ வீடியோ
யாழ்ப்பாணம்.
(சி/3291)

விற்பனைக்கு

கொழும்பில் சிறிது காலம்
பாவித்த
147 - Vespa Select
விற்பனைக்குண்டு.
எமது முகவரி:
குறிஞ்சி பார்மஸி
558, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/54541)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
இன்று மட்டும்
ரஜனி - ஸ்ரீபிரியா
சுமன் நடித்த
'தீ'
நேரம்:- 10-30, 2-30
வெள்ளி முதல் சனி வரை
காலை 10-30
எம்.ஜி.ஆர். நடித்த
படகோட்டி
மாலை 2-30
மதுரையை மீட்ட
சுந்தரபாண்டியன்
தொலைபேசி இல.
070 - 212223
(54347)

யாழ்.
றீகல் வெண் திரையில்
91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
25 அடி அகலத் திரையில்
அனைவரின்
வேண்டுகோளுக்கிணங்க
இன்று மட்டும்
குருதிப் புனல்
அடுத்த வெளியீடு
உள்ளத்தை
அள்ளித் தா
தினசரி:- 10-30, 2-30
தொ.பே.இ. 021 - 2999
(54543)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சதாசிவம் நாகம்மா

அரியாலையைச் சேர்ந்த திருமதி சதாசிவம் நாகம்மா 30-3-98 திங்கட்கிழமை இரவு காலமானார்.

அன்னார் சாண்டோ மாஸ்ரர் என்று அன்பாக அழைக்கப்படும் திரு. ச. சதாசிவம் (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தையா – கற்பகம் தம்பதியரின் ஏக புத்திரியும், குகவரதராசா (கனடா), இந்திராணி, ரதிதேவி, பவானி (கனடா), ஜெயந்தி (கனடா), நந்தகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், புவனேந்திரராசா, ஆலாலசுந்தரம் (கனடா), சண்முகலிங்கம் (கனடா), பாக்கியலட்சுமி (கனடா), ரஞ்சினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், மயில்வாகனம் (ஓய்வுபெற்ற ஆசிரியர். கனடா), காலஞ்சென்ற திருமதி சோமசுந்தரம் இரத்தினம்மா ஆகியோரின் மைத்துனியும், திருமதி ம. கிருஷ்ணம்மாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, கனடா) உடன்பிறவாச் சகோதரியும், உமா, வாணி (கனடா), சரவணபவன், திவாகரன், தாட்சாயினி, தேன்மொழி, துஷ்யந்தி, அகிலா, கதிர்கரன் (கனடா), அபிராமி, ரஜீவன், வரதுணன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், சங்கீதாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02-04-98) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. சதாசிவம்
(கணவர்)

305, ஆனந்தன் வடலி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
(54545)

## சுப்பர் அப்பச்சி

தொல்புரம் மேற்கு சுழிபுரத்தைச் சேர்ந்த சுப்பர் அப்பச்சி நேற்று புதன்கிழமை சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற மீனாட்சியின் அன்புக் கணவரும், திரு. குணரெட்ணம் (ஒய்வு பெற்ற வங்கி, உத்தியோகத்கர்), திருமதி ஆ. புவனேஸ்வரி, திரு. நாகராசா, திருமதி சு. சரஸ்வதி, திருமதி ச. ஜெயலட்சுமி, திருமதி சு. பரமேஸ்வரி, திருமதி சி. மகேஸ்வரி, திரு. பாலகிருஷ்ணன், திருமதி ய. ஈஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 02- 04- 98 நண்பகல் 12 00 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
அ. குணரெட்ணம்
(மகன்)

தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.
(54535)

## திருமதி
## கந்தையா புவனேஸ்வரி

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா புவனேஸ்வரி (கைதடி அம்மா) அவர்கள் 24-3-1998 ஆம் திகதி சிவபதமடைந்துவிட்டார்.

இவர் திரு. மயில்வாகனம் கந்தையா (ஓய்வு பெற்ற ஆசிரியர்—சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை) அவர்களின் அன்புத் துணைவியாரும், வடிவேலன் (சிங்கப்பூர்), பரமேஸ்வரி (மலேசியா), கமலாம்பாள் (கோலாலம்பூர்), ஜெயலக்சுமி, சரவணபவானந்தன், வேலாயுதம் (லண்டன்), ஆகியோரின் அன்புச் சகோதரியும், காசிநாதர் சுப்பிரமணியத்தின் (பாணர்) மருமகளும், பரிமளாதேவி, சிவஞானசூரியர் (R. M. P., கொழும்பு), ஜெயபாலகணேசன் (இ. மி. ச. திருகோணமலை), சிவனேசன் (இலங்கை வங்கி, கொழும்பு தலைமை அலுவலகம்), இரஞ்சினிதேவி (ஜேர்மனி), விமலாதேவி (ஜேர்மனி), சுசிலாதேவி (கனடா), வசந்தாதேவி (ஜேர்மனி), நித்தியானந்தன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), அமரர் சச்சிதானந்தன் (பொலீஸ் திணைக்களம்), இராஜேஸ்வரன் (கனடா), சத்தியசீலன் (பொறியியலாளர், கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மராஜன், அம்பிகாதேவி, ஸ்காந்தா, நந்தினி, பாலசாந்தர், பாலேந்திரன், நடராஜன், ராஜ்குமார், யசோதா ஆகியோரின் மாமியாரும், அனித்ரா, ஜீவகி, சௌமியா, பிரசன்னரூபன், சுஜிதா, லஜிதா (உயர்தர மாணவிகள், புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி), செந்தூரன் (யாழ். மத்திய கல்லூரி) பானுகா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), தக்ஸினி, சரவணன், சுகிர்தினி, நிரோஜினி, பானுரதன், ஆரூரன், ஆர்த்திகன், கார்த்தியாயினி ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2-4-1998) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி. ப. 3.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ம. கந்தையா
குடும்பத்தினர்

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.
(54538)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல் மாகாண முதல்வர் பதவிக்கு சுனேத்திரா நிறுத்தப்படுவாரா?

## மறுக்கிறார் டி.எம்.ஜெயரத்ன

கொழும்பு, ஏப். 2

''மேல் மாகாண சபைத் தேர்தலில் ஜனாதிபதியின் சகோதரி சுனேத்திரா பண்டாரநாயகாவை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவது என பரவியுள்ள செய்தியில் எதுவித உண்மையுமில்லை. இது குறித்து நாம் இன்னும் முடிவு செய்யவில்லை.''

மேற்கண்டவாறு பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான டி. எம். ஜெயரத்ன தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிலுள்ள ஜன நாயக ஐக்கிய தேசிய முன்னணி தவிர்ந்த ஏனைய கட்சிகள் யாவும் இணைந்து எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் ஒரு பட்டியலில் போட்டியிடும்.

இலங்கை முஸ்லிம் காங்கிரஸும் பொதுப் பட்டியலில் போட்டியிட உடன்பாட்டைத் தெரிவித்துள்ளது.

அமைச்சர் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்காத போதிலும் பொதுப் பட்டியலில் அவர்களையும் சேர்த்துக் கொள்வது பற்றி கலந்துரையாடப்படும்.

இப்படி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## வவுனியாமகாவித்தியாலய அகதிமுகாம் மூடப்பட்டது!

வவுனியா, ஏப் .2

வவுனியா மகாவித்தியாலய அகதிகள் முகாம் ஞாயிற்றுக்கிழமை பொலீஸாரால் மூடப்பட்டுள்ளது. இந்த முகாமில் இருந்த அகதிகள் அனைவரும் வேப்பங்குளம் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாச் செயலக அதிகாரிகள் இந்த முகாமை மூடுவதற்கு நீண்ட நாள்களாக முயற்சிகள் எடுத்து வந்த போதிலும் அகதிகள் அந்த முகாமில் இருந்து வெளியேறுவதற்கு மறுப்புத் தெரிவித்து வந்தனர். இதனையடுத்து பொலீஸார் மேற்கொண்ட நடவடிக்கைகளினால் இந்த முகாம் மூடப்பட்டது.

வவுனியா மகாவித்தியாலய முகாம் மூடப்பட்டதையடுத்து அந்தப் பாடசாலை வவுனியாக் கல்வித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்து வவுனியாவில் தங்கியுள்ள சுமார் ஆயிரத்து 800 மாணவர்களுக்கு இப் பாடசாலையில் கல்வி போதிப்பதற்கான நடவடிக்கைகளைக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். (ஐ-164-9)

---

கல்விப்பணிப்பாளருக்கு
எமது

### கண்ணீர் அஞ்சலி

யாழ். கல்வித்திணைக்கள - வலயம் 1 இன்
கல்விப் பணிப்பாளரும் எம் கல்லூரி ஆசிரியை

திருமதி பா. கனகநாயகம்
அவர்களின் மைத்துனருமான

**அமரர் சுப்பிரமணியம் இரத்தினராசா**

அவர்களின் மறைவிற்கு எமது அஞ்சலியை கண்ணீர் மாலையால் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், சிற்றூழியர்,
மாணவர்கள்,
யா/ செங்குந்த இந்துக்கல்லூரி.

[54528]

---

### கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் பழைய மாணவரும்,
யாழ். கல்வித்திணைக்களம் வலயம் 1 இன்
கல்விப்பணிப்பாளருமாகிய

**அமரர் சு. இரத்தினராசா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் கல்விச் சமூகத்தினருக்கும், அன்னாரின் குடும்பத்தாருக்கும் எமது கண்ணீர்ப்பூக்களை அஞ்சலியாகச் செலுத்துகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் மன்றம்,
யா / வைத்தீஸ்வராக்கல்லூரி.

(54529)

---

### கண்ணீர் அஞ்சலி

26. 03. 98 அன்று சிவபதமடைந்த எமது சகமாணவன்
இ.இரஞ்சிதன்
அவர்களின் தாயார்

**திருமதி இராமலிங்கம் காருண்யாபுஷ்பம்**

அவர்களின் மறைவு குறித்து எமது கண்ணீர் அஞ்சலியைத்தெரிவித்துக் கொள்கின்றோம்.

2 ஆம் வருட (A பிரிவு) வர்த்தக பிரிவு மாணவர்கள்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(54534)

---

### தேவை

தமிழ் - ஆங்கில மொழி பெயர்ப்பு, ஆங்கில ரைப்பிங் ஆகியவற்றில் அனுபவமுள்ள ரைப்பிஸ்ற் உடன் தேவை. சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும், இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

எஸ். கணேசன்,
மோகன்ஸ்,
யாழ். வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

(54504)

---

## சனசமூக நிலையம் புனரமைப்பு

யாழ். அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் யுத்தகால அனர்த்தங்களின் பின்னர் புனரமைக்கப்பட்டு அண்மையில் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டு இயங்கி வருகிறது.

## யோகர்சுவாமி குருபூசை தினம்

கொழும்புத்துறை, ஏப். 2

கொழும்புத்துறை யோகர் சுவாமியின் வருடாந்த குருபூசைத்தினம் ஆயிலியம் நட்சத்திர தினமான எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9-30 மணி தொடக்கம் யாழ். கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் வித்தியாலய அதிபர் சி. ஆ. சோதிலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் மல்லாகம் நீதிமன்ற நீதிபதி மு. திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகப் பங்கு பற்றி ''யோகர் சுவாமிகளின் அருள்நெறி, வாழ்க்கை வரலாறு'' என்னும் தலைப்பில் உரை நிகழ்த்தவுள்ளார்.

இந்நிகழ்வில் யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை, பஜனை, கூட்டுப்பிரார்த்தனைப் பாடல்கள் என்பனவும் இடம்பெறும்.

---

### செல்வா நினைவை ஒட்டி

## புளொட் மேற்கொண்ட சிரமதானங்கள் பூர்த்தி

யாழ்ப்பாணம், ஏப். 2

தந்தை செல்வா நூற்றாண்டு நிறைவை ஒட்டி புளொட் அமைப்பினால் யாழ். நகரில் உள்ள தந்தையின் தூபி முன்றலிலும், யுத்த அழிவுகளுக்கு உள்ளான பாடசாலை விளையாட்டு மைதானங்களிலும் மேற்கொள்ளப்பட்ட சிரமதானப் பணிகள் பூர்த்தி அடைந்துள்ளன.

தந்தை செல்வா நூற்றாண்டு நிறைவை ஒட்டி புளொட் அமைப்பு விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ்த் தேசிய இனத்தின் தந்தை அமரர் மூதறிஞர் சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களது நூற்றாண்டையொட்டி புளொட் அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள் மட்டத்திலான கவிதை, கட்டுரை, பேச்சு, விவாதம் போன்ற போட்டிகள் தந்தை செல்வா நூற்றாண்டு நினைவுத் தேசிய அவையினாலும் நடத்தப்படுவதால் இரண்டு போட்டிகள் நடத்துவது உகந்ததல்ல என்ற காரணத்தினால் அவர்களின் வேண்டுகோளின் பேரில் அப்போட்டிகளை நாம் ரத்துச் செய்திருந்தோம்.

ஏனைய நிகழ்வுகள் ஏற்பாட்டின்படி நடைபெற்று வருகின்றது.

பாடசாலை விளையாட்டுப் போட்டிகளுக்கான கேடயங்கள், கிண்ணங்கள் பரிசுகள் யாவும் தந்தை செல்வா நினைவாகவும் அவரது வழியில் உரிமைப்போருக்கு உரமூட்டிப்போராடி மரணித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோப்பாய் கோமகன் அமரர் கு. வன்னியசிங்கம், சிந்தனைச்சிற்பி, சி. கதிரவேற்பிள்ளை; வே.யோகேஸ்வரன், டாக்டர் நாகநாதன், வ. வ. நவரத்தினம் ஆகியோர் நினைவாகவும்ஆயுதப் போராட்டத்தின்முன்னோடி தியாகி சிவகுமாரன் எமது கழகத்தின் செயலதிபர் தோழர் க. உமாமகேஸ்வரன் ஆகியோர் நினைவாகவும் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டென்மார்க்கிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டனர்

டென்மார்க்கில் அரசியல் புகலிடம் மறுக்கப்பட்ட எட்டு இலங்கைத்தமிழர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்புக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

கடந்த 26 ஆம் திகதி நள்ளிரவு மோப்பநாய்களுடன் தமது இருப்பிடங்களுக்கு வந்து தம்மை கைது செய்த டென்மார்க் பொலீஸார் தடுத்து வைத்து விசாரணை நடத்திய பின்னர் திருப்பி அனுப்பி வைத்ததாக திரும்பி வந்தவர்களில் ஒருவரான க. கிருஷ்ணன் என்பவர் தெரிவித்தார்.

திருப்பி அனுப்பப்பட்டவர்களில் மூன்று தமிழ்ப் பெண்களும் அடங்குவர்.

---

உ

நுணாவில் மத்தி
[வைரவர் கோயில் என வழங்கும்]
அருள்மிகு

### ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
### மஹோற்சவ விஞ்ஞாபனம்

| | |
|---|---|
| கொடியேற்றம் | : 02 - 04 - 1998 வியாழக்கிழமை காலை 9 - 00 மணி |
| வேட்டைத்திருவிழா | : 08 - 04 - 1998 புதன்கிழமை |
| சப்பறத்திருவிழா | : 09 - 04 - 1998 வியாழக்கிழமை |
| தேர்த்திருவிழா | : 10 - 04 - 1998 வெள்ளிக்கிழமை |
| தீர்த்தத்திருவிழா | : 11 - 04 - 1998 சனிக்கிழமை |

தினமும் காலை 9-00 மணிக்கும் மாலை 3-00 மணிக்கும் திருவிழா ஆரம்பமாகும்.

மஹோற்சவ குரு: மட்டுவில், சிவஸ்ரீ இ. சோமசுந்தரக் குருக்கள் ஆசியுடன்

சரசாலை, நுணுவில் விநாயகர் ஆலய குரு சிவஸ்ரீ ந. இராஜேஸ்வரக்குருக்கள் (இராசன்) தலைமையில் இடம்பெறும்.

(54526)

ஆலய பரிபாலகர்

---

### லயன்ஸ் கழகம் - மானிப்பாய் வட்டம்
### LIONS CLUB OF MANIPAY CIRCLE
## கண் பரிசோதனை முகாம்

WE SERVE

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினரால் கண்ணுக்கு முதலிடம் கொடுக்கும் சேவைத் திட்டத்தின் கீழ் வரும் 05 - 04 - 1998 (ஞாயிறு) சுதுமலை மத்தியிலுள்ள சிந்மய பாரதி ஆரம்ப பாடசாலையில் கண் பரிசோதனை சேவையை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பிரபல கண் சோதனை நிபுணர்களான S. M. பெர்னாண்டோ ஸ்தாபனத்தினரால் அன்று காலை 9-00 மணி தொடக்கம் பரிசோதனை நடத்தப்படும். இச் சேவையின் மூலம் பயனடைய விரும்புவோர்கள் சுதுமலை மத்தி - குன்றடி சனசமூக நிலையத்திற்கு முன்னாலுள்ள லயன் பொன்னம்பலம் அவர்களின் வதிவிடத்தில் பெயர்களைப் பதிவு செய்யலாம். வசதி குறைந்த மக்களுக்கு முன்னுரிமை வழங்கி அவர்களுக்குத் தேவைப்படும் மூக்குக் கண்ணாடி கூடிய விரைவில் வழங்க மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். இச் சேவையுடன் இரத்த அமுக்கப் பரிசோதனையும் அன்று நடைபெறும்.

லயன் A. C. செபநாயகம்
தலைவர்

விளம்பர அன்பளிப்பு:

### ஸ்ரீசுபா வெதுப்பகம்

சுதுமலை, மானிப்பாய். (54531)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## இரண்டு சில்லு உழவு இயந்திரம்

(லான்ட் மாஸ்ரர்)

## விற்பனைக்கு உண்டு

மேற்படி எமது சங்கத்திற்குச் சொந்தமான K. 75 - 72 சிறி 9445 இலக்கம் கொண்ட குபாட்டா லான்ட் மாஸ்ரர் (ஜப்பான்) பெட்டி கலப்பையுடன் விற்பனைக்கு உண்டு. இது சம்பந்தமாக 20 - 04 - 98 ஆம் திகதிக்கு முன்னதாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

பொது முகாமையாளர்,
கோண்டாவில் பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
தலைமைக் காரியாலயம்.

K. K. S. வீதி,
தாவடிச் சந்தி.

(சி-3266)


## மரக்கறி விலை தொடர்ந்து வீழ்ச்சி

உரும்பிராய். ஏப். 2

மரக்கறி வகைகளின் விலைகளில் வீழ்ச்சி காணப்படுகிறது. திருநெல்வேலி பொதுச் சந்தையில் அநேகமான மரக்கறிகளின் விலை கிலோ 10 ரூபாவிற்கு குறைவாக உள்ளதை அவதானிக்க முடிகிறது.

அபரிமிதமான விளைச்சலும், சந்தைவாய்ப்புக் குறைவாக இருப்பதுவுமே இந்த விலைச்சரிவுக்குக் காரணமாகும். இதனால் விவசாயிகள் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர்.

(ஐ-154)

## கூ, சங்க விற்பனை நிலையம்

நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் பல்பொருள் விற்பனை நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நீர்வேலியில் இயங்கும் இந்நிலையத்தில் ஆலயங்களுக்குரிய அபிஷேகத் திரவியங்கள், மரணக் கிரியைகளுக்குரிய பொருள்கள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இவை தவிர அலங்காரப் பொருள்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

(ஐ - 154)


உ
தேவிமயம்

வண். வடமேற்கு, ஆனைக்கோட்டை

## ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள் திருக்கோயில்

## திருக்குடமுழுக்கு பெருஞ்சாந்தி விழா மஹாகும்பாபிஷேகம் 03-04-1998

பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தல்
[தைலாப்பியங்கம்]

02 - 04 - 98 வியாழன் காலை 9. 00 மணிமுதல் மாலை 3. 00 மணிவரை.

மஹாகும்பாபிஷேகம்

03 - 04 - 98 (பங்குனி 20 ஆம் நாள்) வெள்ளி காலை 8. 48 மணி முதல் 10. 27 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து 12. 00 மணியளவில் அன்னதானம் இடம் பெறும்.

மண்டலாபிஷேகம்

மண்டலாபிஷேகம் செய்ய விரும்புபவர்கள் மேற்படி ஆலய தர்மகர்த்தா சபையுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யவும்.

அடியார்கள் அனைவரும் வருகை தந்து அம்பாளின் மஹாகும்பாபிஷேகத்தைக் கண்குளிரக் கண்டுகளித்து அம்பாளின் திருவருளைப் பெற்று பெருவாழ்வு வாழ்வீர்களாக!

தர்மகர்த்தா சபையும்,
இந்து இளைஞர் மன்றமும்.

ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள் ஆலயம்,
ஆனைக்கோட்டை.

(54516)



## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களம் வலயம் 1 இன் கல்விப்பணிப்பாளரும், சேவையே நோக்கமாகக் கொண்டவருமான அன்பு மிகு

### அமரர் சு. இரத்தினராசா

அவர்கள் காலமானதையிட்டு அதிர்ச்சியடைந்தோம். ஆழ்ந்த கவலையுடன் அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

அவரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தவர்களுக்கும், சகோதரர்கள், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதிபர், உபஅதிபர்,
ஆசிரியர்கள், ஊழியர்கள்,
மாணவர்கள்.

மானிப்பாய் மகளிர் கல்லூரி

[50015]



## நெல்லியடி சனசமூக நிலையம் பொன் விழா

யாழ். E. S. பேரம்பலம் நிறுவனத்தின்
ஆதரவுடன்
N. C. C. விளையாட்டுக் கழகம் நடத்தும்

### மாபெரும் 30 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி

காலம்: 12-04-1998 காலை 6.00 மணி

ஆரம்பமாகும் இடம்: யாழ். E. S. பேரம்பலம் நிறுவனம் முன்பாக (கஸ்தூரியார் வீதி)

செல்லும் பாதைகள்: ஸ்ரான்லி றோட்→ 750 பேருந்து பாதைவழியாக→ பருத்தித்துறை 1ஆம் கட்டை→ நாவலடிச்சந்தி→ வியாபாரிமூலை→ வல்வெட்டித்துறை→ உடுப்பிட்டி→ வதிரிச்சந்தி→ நெ. ம. ம. வீதி வழியாக, நெல்லியடிச்சந்தியில் முடிவடையும்.

1 ஆம் பரிசு: LUMALA சைக்கிள்
2 ஆம் பரிசு: கசற் றேடியோ
3 ஆம் பரிசு: பெற்றோமாக்ஸ்

பங்குபற்ற விரும்புவோர் தங்கள் பெயரைப் பதிவு செய்ய வேண்டிய இடங்கள்:

யாழ்ப்பாணம் — E. S. பேரம்பலம் & கோ
கோப்பாய் — சற்குணம் கராஜ்
அச்சுவேலி — ராஜன் எலெக்ரோனிக்ஸ்
நெல்லியடி — மருதம் இரும்பகம்
பருத்தித்துறை — வேலவன் ஸ்ரோர்ஸ்
கொடிகாமம் — ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ்

பதிவு செய்யும் கடைசித் திகதி: 07-04-1998

பங்குபற்றுவோர் தங்கள் கிராமசேவையாளர் பிரிவு இல, அடையாள அட்டை இல, பெயர் முகவரி என்பன அடங்கிய விண்ணப்பத்தை மேற்குறிப்பிட்ட இடங்களில் ஒப்படைக்கவும்.

நெல்லியடி
செல்லமுத்தூஸ் புடைவைமாளிகை
ஆதரவில்
N. C. C, விளையாட்டுக் கழகம் நடத்தும

### மாபெரும் 10 மைல் மரதன் ஓட்டம்

காலம்: 13-04-1998 காலை 6.00 மணி

ஆரம்பமாகும் இடம்: நெல்லியடி செல்லமுத்தூஸ் புடைவைமாளிகை முன்பாக

1 ஆம் பரிசு றேடியோ
2 ஆம் பரிசு பெற்றோமாக்ஸ்
3 ஆம் பரிசு மண்ணெண்ணெய் குக்கர்

பங்குபற்றுவோர் தங்களின் முழுவிவரத்தை 10-04-1998க்கு முன்பு நெல்லியடி செல்லமுத்தூஸ் புடைவை மாளிகையில் பதிவு செய்து கொள்ளவும்.

- செயலாளர்

(சி/3262)



## நன்றி செலுத்தும் ஆராதனை

கர்த்தருக்குள் நித்திரையடைந்த

திருமதி அற்புதராணி ராஜசிங்கம் [கனடா]

அவர்களின் பூவுலக வாழ்வுக்கு நன்றி செலுத்தும் ஆராதனை 03-04-98 வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு (S. L. T.) கோப்பாய் பரி. கன்னிமரியாள் ஆலயத்தில் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கிருபா. நவரத்தினம்.

''ரத்ன வாசா''
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(54519)



## கண்ணீர் அஞ்சலி

### அமரர் சு. இரத்தினராசா

(கல்விப்பணிப்பாளர் வலயம் I)

அவர்களின்

மறைவினை அறிந்து ஆழ்ந்த கவலையுடன் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரது பிரிவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
அலுவலக ஊழியர்கள்.

யா. சாவகச்சேரி இந்துக் கல்லூரி
சாவகச்சேரி,

(54496)



## ஆத்மா சாந்தியடைய...

யார் யாருக்கு எவை எவை தேவை என்பதை அறிந்து செயற்பட்ட கர்மவீரரும், கல்வி வலயம் - 01 இன் கல்விப்பணிப்பாளரும், எமது பாடசாலையின் சக ஆசிரியை திருமதி அ. வல்லிபுரம்

அவர்களின் கனிஷ்ட சகோதரருமாகிய

### உயர்திரு. சு. இரத்தினராசா

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்,

யா/ சன்மார்க்க மகா வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

(54536)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பலில் வரும் பொருள்கள் குறைவது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்

## புனர்வாழ்வு சபைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 2

''கொழும்பில் இருந்து கப்பல்கள் மூலம் எடுத்து வரப்படும் பொருள்களில் குறைவு ஏற்படுவது குறித்து என்னிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்களுடன் ஆலோசித்து இந்த நிலையை தவிர்க்க நடவடிக்கை எடுக்க விருக்கிறேன்.

இப்படி வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு, அதிகார சபைத் தலைவர் என். ஏ. ஒபடகே தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடத்திய கலந்துரையாடலிலும், பலருடன் நடத்திய பேச்சுக்களிலும் கப்பல்களில் வரும் பொருள்கள் குறைவது குறித்து எடுத்துக் கூறப்பட்டது.

ஒன்று அல்லது இரண்டு சதவீதம் குறைவது சாதாரண விடயம். ஆனால் 20 முதல் 40 சதவீதம் குறைவு ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கான காரணத்தைக் கண்டுபிடிக்க சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி அந்த நிலையை நிறுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளேன்.

யாழ். குடாநாட்டுக்கான போக்குவரத்துப்பாதை திறக்கப்படும் பட்சத்தில் இந்நிலை ஏற்படாது என நம்புகின்றேன். பாதை திறக்கப்பட்டதும் மக்கள் குறைந்த, நியாய விலையில் பொருள்களைப் பெறமுடியும்—என்றார் அவர். (இ- 3)


வாழ்த்துகின்றோம்

39 வருடம் இலங்கைவங்கியில் சேவையாற்றி
3 - 04 - 98 இல் ஓய்வுபெறும் மானிப்பாய்
இலங்கைவங்கி முகாமையாளர்



★ ★

திரு. மயில்வாகனம் நாகேந்திரம்
அவர்கள்

மானிநகர் இலங்கைவங்கி முகாமையாளர்
மன்னிடுநற் பதவிபெற்ற நாகேந்திரமும்
தேனினிக்கும் இன்சொல்லால் செயலால் என்றும்
தேசமக்கள் உளத்தில் உயர் இடமும்பெற்றார்
ஞானமிகு நாகேந்திரம்தன் சேவையினால்
ஞாலமதில் பெருமதிப்பும் பெற்றார் அண்ணல்
மோனமிகு நாகேந்திரமும் செய்தசேவை
மக்களுளம் மறக்காது நீடுவாழி

என வாழ்த்தும்
முகாமையாளரும் ஊழியர்களும்.

இலங்கைவங்கி,
மானிப்பாய்.

(54479)



T. V. S. SUZUKI — SCOOTY
MOTOR CYCLES

பெண்களுக்கு மிகவும் உகந்த வாகனம்
புதுவருடத்தை முன்னிட்டு விசேட கழிவு உண்டு.
விற்பனையாளர்கள்:

பிரிமியர் ஒட்டோமோட்டிவ்ஸ்
PREMIER AUTOMOTIVES
338, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(54471)


## மண்ணெய் விநியோகம்

உரும்பிராய், ஏப். 2

மார்ச் மாதத்திற்குரிய பங்கீட்டு மண்எண்ணெய் நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் விநியோகிக்கப்படுகிறது. 5 ஆம் திகதிக்கு முன்பு ஒவ்வொரு குடும்பத்திற்குரிய 6 லீற்றர்களையும் பெற்றுகொள்ளும்படி பாவனையாளர்கள் கோரப்பட்டுள்ளனர். இத்துடன் விவசாயிகளுக்கு உரிய பங்கீடும் வழங்கப்படுகிறது.

இதே வேளையில் உரும்பிராய் பெற்றோல் நிலையத்தில் குடும்ப அட்டைக்கு 5 லீற்றர் வீதம் மண்எண்ணெய்விற்பனை செய்யப்படுகிறது. (ஐ-154)


கண்ணீர் அஞ்சலி

அமரர் சு. இரத்தினராசா
(கல்விப் பணிப்பாளர் வலயம் 01)
அவர்களின்

ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா. நாவாந்துறை றோ. க. வித்தியாலயம்.
(54498)



ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
வேலுப்பிள்ளை சிவஞானம்
அமரத்துவம் 12 — 04 — 1997
சிரார்த்தம் (திதி) 02 — 04 — 1998

தென்புலத்தார் தெய்வம் விருந்து
சுற்றம்தான் என்றிவை ஓம்பி
இல்லறத்தில் நல்லறம் கொண்டு
செயலெல்லாம் சிவன் துதியாய்
பேச்சு ஜெபமாய், நடை பிரதட்சணமாய்
உணவு ஆகுதியாய் உள்ளத்துறவுபூண்டு
உலகில் உலா வந்த உத்தம ஆத்மா
அரனடி அடைந்து என்றும் பெறுக
சாந்தி.

— குடும்பத்தினர்

32, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.
(54467)



கண்ணீர் அஞ்சலி

கல்வியின் கலங்கரை விளக்காகத் திகழ்ந்த
எமது கல்விப் பணிப்பாளர்

அமரர் சு. இரத்தினராசா

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நாம் ஆற்றொணாத்துயர் அடைகின்றோம். அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினர், கல்விப் புலத்திலுள்ளோர் ஆகியோரின் துயரில் நாமும் உரிமையுடன் பங்கேற்கின்றோம்.

கோட்டக் கல்வி அலுவலர்கள்,
அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கோப்பாய்க் கல்விக் கோட்டம்.
(54507)


## நடவடிக்கை பூர்த்தி

யாழ்ப்பாணம், ஏப். 2

வடமராட்சி கிழக்கு நாகர் கோயில் பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் மேற்கொள்ளப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை முடிவடைந்துவிட்டதாக யாழ். படைவட்டாரங்கள் செவ்வாயன்று தெரிவித்தன.

இந்த நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகளுடன் பெரிய அளவில் மோதல் ஏதும் இடம்பெறவில்லை என்று அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3-117)


கண்ணீர் அஞ்சலி

உடுவில் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளராகவும்,
யாழ். வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளராகவும்
கடமையாற்றி சிவபதமெய்திய

அமரர் சு. இரத்தினராசா

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகளுக்கும், குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/ புன்னாலைக் கட்டுவன் அ. த. க. பா.
சுன்னாகம்.
(54472)



சித்திரைப் புத்தாண்டின் சிறப்புத் தள்ளுபடி

★ அத்தியாவசியப் பொருள்கள் ★ ஆடவர் – நங்கையர்களுக்கான சகலவித உள்ளாடைகள்
★ குழந்தைகளுக்கான பாவனைப் பொருள்கள் ★ சகலவிதமான காலுறைகள் (Socks)
★ பாடசாலை உபகரணங்கள் ★ அன்பளிப்பு, அலங்காரப் பொருள்கள்
★ பிறந்த நாள், திருமண வாழ்த்து மடல்கள் ★ பிளாஸ்ரிக் சாமான்கள்

CURVFORM & CARINA BRASSIERES, SILVER SHIELD PRODUCTS (Socks & Elastic)

இன்னும் பலவகைகளை மொத்தமாகவும் – சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

லிங்கன் ஸ்ரோர்ஸ் 168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(54470)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

பிறவுண்வீதி 1 ஆம் ஒழுங்கையில் $1\frac{1}{2}$ பரப்புக் காணியுடன் கூடிய நல்ல வசதியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: G. மகேஸ்வரன், 14/3, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
[54513]

### விற்பனைக்கு

பல இன கலர் வளர்ப்பு மீன்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- (நண்பகல் 12.00 மணியில் இருந்து பார்வையிடலாம்) A. அருளானந்தம் (குட்டி), 588/8, நாவலர் வீதி, அரியாலை (ஸ்ரான்லி கல்லூரிக்கு முன்ஒழுங்கை)
(54390)

கொழும்பிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சகல அளவிலுமான அலுமினியப் பானைகள், செம்புகள் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: தபாற்கட்டைச் சந்திக்கு அருகில் R. சங்கரன், இல. 75, செம்மணி ஒழுங்கை, அரியாலை. [54476]

## பாடசாலை பழைய இடத்தில் இயங்குகிறது

யாழ்ப்பாணம், ஏப். 2

மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலயம் மார்ச் 24 ஆம் திகதி முதல் சொந்த இடத்தில் மீண்டும் இயங்குகிறது.

கடந்த 6 வருடங்களுக்கு மேலாக இடம் பெயர்ந்த நிலையில் வேறுஇடத்தில்இப் பாடசாலை இயங்கி வந்தது.
(ஐ-7)

## வவுனியாவில் மின் மாற்றி தகர்ப்பு

வவுனியா — மன்னார் வீதியில் சாளம்பைக்குளம் என்ற இடத்தில் உள்ள மின்மாற்றி (டிரான்ஸ்போமர்) கடந்த திங்கள் இரவு 11 மணிக்கு இனந்தெரியாதோரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட சேதம் ஐந்து லட்சம் ரூபாவுக்கு அதிகம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (உ)


யூனிவேர்சல்
கந்தர்மடம்
PAPER CLASS
அலகுரீதியான மீட்டல்
திரு. தவா
ஆரம்பம்:
02 – 04 – 98
செவ்., புதன், வியா.
7. 00 A. M.
AL ( 99
சொத்து விற்பனை
ஆரம்பம்:
04 – 04 – 98
6. 30 A M.
(54506)


## கண்ணீர் அஞ்சலி

யாழ். வலயம் 1 கல்விப்பணிப்பாளர்

**அமரர் சு. இரத்தினராசா**

அவர்களின் பிரிவுத்துயரில் எமது பாடசாலைச் சமூகம் ஆழ்ந்த கவலையோடு தன்னை இணைத்துக் கொள்கின்றது. அழைத்த போதெல்லாம் மறுக்காமல் வந்து எமது பாடசாலை விழாக்களைச் சிறப்பித்து வீற்றிருந்த காட்சி நேற்று நடந்ததுபோல் நெஞ்சில் நிழலாட வார்த்தையின்றித் துடிக்கின்றோம். வகையறியோம் உனை மீட்க. எழுந்துவர மாட்டாயா? ஏங்குகிறோம் உன்பிரிவால்!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
(54500)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். கல்வித் திணைக்களம் வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளரும், எமது பாடசாலை அபிவிருத்திச் சங்க முன்னாள் செயலாளரும்,

பழைய மாணவி காவேரியின்

அன்புத் தந்தையாருமாகிய

**சு. இரத்தினராசா**

அவர்கள் 30 – 03 - 98 - காலமானதையிட்டு அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைவதுடன் எமது கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், சிற்றூழியர்.
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
யாழ். இந்து மகளிர் கல்லூரி.
(சி/3269)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளரான பாசமிகு

**அமரர் சு. இரத்தினராசா**

அவர்கள் 30–03–98 இல் காலமானதையிட்டு நாம் அதிர்ச்சி அடைவதுடன், ஆழ்ந்த கவலையுடன் எமது கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துகின்றோம்.

அன்னாரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர்கள்.
யா/ அட்டகிரி சைவ வித்தியாசாலை,
நவாலி வடக்கு, மானிப்பாய்.
(54491)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களம் வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளரும் கல்வித்திணைக்கள நலன்புரிக் கழகத்தின் காப்பாளருமான பாசமிகு

**அமரர் சு. இரத்தினராசா**

அவர்கள் 30. 3. 98 இல் காலமானதையிட்டு நாம் அதிர்ச்சியடைவதுடன் ஆழ்ந்த கவலையுடன் எமது கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துகின்றோம். அன்னாரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தவர்களுக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பி. ஜெ. பர்னாண்டோ குடும்பத்தினர்
542, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம். (சி/3270)


1st IN Com., G. A. Q. 98|99
( யாழ். பல்கலைக்கழகம், பேராதனை ) [வெளிவாரி]
★ மேற்குறிப்பிட்ட பாடநெறிக்கு விண்ணப்பங்கள் பல்கலைக்கழகங்களால் கோரப்பட்டுள்ளன.
★ இதற்கான பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.
★ இதற்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.
★ விவரங்களையும், விண்ணப்பப்படிவத்தினையும் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
விவரங்களுக்கு: S. அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம்சந்தி – யாழ். (54481)


## அரசாங்க அறிவித்தல்

சுகாதார திணைக்களம், யாழ்ப்பாணம்.

### வைத்தியசாலைத் துணிகள் சீருடைத்துணிகள் வழங்கல்

சுகாதாரத்திணைக்களத்திற்கு வைத்தியசாலைத் துணிகள், சீருடைத் துணிகள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் என்னால் 20-04-98 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் 07-04-98 ஆம் திகதி முதல் 20-04-98 ஆம் திகதி காலை 10.00 மணிவரை எனது பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். விரிவான விவரம் தேவைப்படுவோர் பணிமனை நேரத்தில் எனது பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பிப்போர் மாதிரிகளுடன் விண்ணப்பிக்க வேண்டும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி குறிப்பிட்ட பொருள்களை ஒரு மாத காலத்திற்குள் எனது பணிமனையில் ஒப்படைக்க வேண்டும்.

வைத்தியகலாநிதி க. தா சிவபாதம்,
பதில் மாகாண பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

இல. 46, மணிக்கூண்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம். (சி/3231)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களம் வலயம் – 1 இன் கல்விப்பணிப்பாளர்

**அமரர் சு. இரத்தினராசா**

அவர்களின் மறைவு குறித்து அதிர்ச்சியடைவதுடன் அன்னாரினது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/வட்டு. இந்துக்கல்லூரி,
சித்தன்கேணி.
(சி/3277)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் வலயம் – 1 இன் பணிப்பாளரும், எமது பகுதிநேர ஆங்கில ஆசிரியர்

திரு. சு. பழனிவேற்பிள்ளை

அவர்களின் சகோதரருமாகிய

**சு. இரத்தினராசா**

அவர்களின் மறைவு குறித்து அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்,
மாணவர்கள்
யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்
(54495)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி முன்னாள் ஆசிரியர்

**அமரர் சு. இரத்தினராசா**

(கல்விப் பணிப்பாளர், வலயம் - 1)

அவர்கள் 30 – 03 – 98 அன்று காலமானதை அறிந்து அதிர்ச்சியடைகின்றோம், அன்னாரின் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
கோப்பாய்.
(54493)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் வலயம் 1 இன் கல்விப்பணிப்பாளர்

**அமரர் சு. இரத்தினராசா**

அவர்களின் மறைவு குறித்து அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழையமாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/ புனித அந்தோனியார் கல்லூரி,
ஊர்காவற்றுறை.
(54499)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட.-கிழக்கு தமிழர் தாயகம் என்பதை அன்றே வலியுறுத்தினார் செல்வா

## நூற்றாண்டு விழாவில் துணைவேந்தர் உரை

யாழ்ப்பாணம், ஏப். 2

வடக்கு — கிழக்கு மாகாணம் தமிழர் தாயகம் என்பதை என்றைக்கோ வலியுறுத்திய தந்தை செல்வாவின் கூற்றினை இன்று அனைவருமே ஏற்றுக் கொண்டுள்ளனர்.

தந்தை செல்வா நூற்றாண்டு விழாவிற்குத் தலைமை வகித்து உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் கூறியதாவது:-

தமிழினம் ஒரு தேசிய இனம்; சுயாட்சியுடன் வாழத் தகுதியுடைய தமிழர்கள் சுய உரிமை பெற்று இந்த நாட்டில் வாழுகின்ற ஏனைய மக்களோடு சரிசமமாக வாழ வேண்டும் என்பதை 1950 களிலேயே எடுத்துரைத்தவர் தந்தை செல்வா.

தந்தை செல்வா அரசியலுக்கப்பால் தமிழினத்தின் ஏகோபித்த தலைவனாக, விடிவெள்ளியாகத் திகழ்ந்தார். வடக்கு — கிழக்கு, மலைநாடு என்ற பிரதேச வேறுபாடுகளை மறந்து எல்லோரையும் ஒன்று படுத்தியவர் அவர்.

சகல விடயங்களிலும் இதய சுத்தியுடன் செயற்பட்டமையினால் தமிழ் மக்களின் நெஞ்சில் என்றும் அவர் வீற்றிருக்கிறார். அரசியலுக்கு அப்பால் ஈழத்தமிழர்களுக்கென இறைவனால் அனுப்பப்பட்ட இறை தூதனாக தந்தை செல்வாவைக் கண்டோம்.

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் என்று செல்வா அன்று சிந்தித்தார். இன்று செல்வா விரும்பியதிலும் பார்க்க மூன்றுபல்கலைக்கழகங்களும் இரு கல்லூரி வளாகங்களும் நிறுவப்பட்டுள்ளன.

வடக்கு — கிழக்கு மாகாணம் ஒன்றாக இணைந்திருப்பதற்கு வித்திட்டவர் தந்தை செல்வா. தமிழ் மொழி, நிர்வாக மொழியாக்கப்பட வேண்டும் என்று அன்று வாதிட்டார். இன்று தமிழ்மொழி நிர்வாக மொழியாக நடைமுறையில் இல்லாது விட்டாலும் சட்டரீதியாக அமுல் செய்யப்பட்டுள்ளது என்றார்.

### துர்க்கா துரந்தரி

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தான சபைத் தலைவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உரையாற்றும் போது கூறியதாவது:-

மாமனிதர் என்ற நிலையிலிருந்து தெய்வ நிலைக்கு உயர்ந்து விட்டார் தந்தை செல்வா. அவருடைய நூற்றாண்டு விழா தெய்வவிழாவாக அமைகிறது. தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்ற அவரின் கூற்று தீர்க்க தரிசனமானது. அவர் எவருக்கும் தீங்கு விளைவிக்காத சாத்வீகமான வாழ்க்கையை வாழ்ந்தவர்— என்று கூறினார்.

### மெதடிஸ்த குரு

வடக்கு— கிழக்கு மறைமாவட்ட மெதடிஸ்த திருச்சபைத்தலைவரும் எஸ். எஸ். கருணை முகாமைகுருவுமான ராஜ் அடிகளார் தமது உரையில்—

தந்தை செல்வா நேர்மையான வாழ்வை வாழ்ந்து காட்டியவர். அவரது வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியும் அவரது நேர்மையை நிரூபிக்கின்றன— என்றார்.

யாழ். பல்கலைக் கழக கிறிஸ்தவ முஸ்லிம் நாகரிக துறைத் தலைவர் வண. பிதா அன்ரன் மத்தியாஸ் உரையாற்றுகையில்—

பெரும் அழிவுகளைச் சந்தித்து சோர்ந்து போயிருக்கின்ற இன்றைய நிலையில் கூட தமிழ் மக்கள் தந்தை செல்வாவை நினைத்துப் பார்க்கிறார்கள். அவரது தூரநோக்கு இன்றும் தமிழினத்துக்கு வழிகாட்டுகிறது— என்றார்.

மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஜனாப் பசீர் உரை யாற்றும் போது கூறியதாவது—

தந்தை செல்வா தோல்விகளைக் கண்டு அஞ்சாது விடாது போராடி வெற்றி கண்டவர். அவரை ஒரு அரசியல் தத்துவ ஞானியாக மதிக்கின்றோம். மேலும் செல்வாவை முஸ்லிம்கள் வேறு கண்ணோட்டத்தில் பார்க்கவில்லை. நாட்டுமக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ்வதற்கு அவர் வித்திட்டார்—என்று கூறினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி உப தலைவர் வீ. ஆனந்த சங்கரி உரையாற்றும் போது கூறியதாவது—

தந்தை செல்வா ஒரு சிறந்த பேச்சாளர். அவரை எதிர்த்தவர்களில் நானும் ஒருவன். அவருக்கு கோபம் வந்ததை நான் ஒருபோதும் கண்டதில்லை. எவரையும் ஏசியும் இருக்க மாட்டார். எந்த விதமான தீய செயல்களிலும் அவர் ஈடுபடவில்லை. எவருக்கும் தலை வணங்காத அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் கூட தந்தை செல்வாவின் தலைமையை ஏற்று தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்து கொண்டவர்.

அவருக்கு எதிரிகள் கிடையாது. நாடாளுமன்றத்திற்கு அவர் வருகின்றபோது சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவரது கார்க்கதவைதிறந்து நாடாளுமன்றம்வரையும் அவரது கைகளைப்பிடித்து அழைத்து வருவதுண்டு.

இலங்கையின் வரலாற்றிலே ஒரு சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த தந்தை செல்வா பேச எழுந்த பலசந்தர்ப்பங்களின் போது அமைச்சர்கள் கூட விட்டுக்கொடுத்த சம்பவங்கள் தந்தை செல்வா காலத்தில்தான் நடந்தன— என்று கூறினார்.

மாவை சேனாதிராஜா தனது உரையில் —

இலங்கையில் மரணமான ஒரு தலைவருக்கு 5 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு கண்ணீர் அஞ்சலி செலுத்தினார்கள் என்றால் அது தந்தை செல்வாவுக்கு மட்டும்தான்.

தந்தை செல்வாவின் சமஷ்டி தத்துவத்தை அன்று நடைமுறைப்படுத்தியிருந்தால் இன்று இந்த நிலை வந்திருக்காது.

அறவழியில், அஹிம்சை வழியில் வடக்கு — கிழக்கு மாகாண மக்களை அணிதிரட்டி அரசின் அடக்குமுறைகளை எதிர்த்தவர் அவர். தந்தையின் தலைமைத்துவத்தில் 1958 ஆம் ஆண்டு காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம் மேற்கொள்ளப்பட்ட போது குண்டர்கள் அடித்தார்கள், உதைத்தார்கள். ஆனால் அஹிம்சை காத்து அசையாது போராடினார்கள். அன்றுதான் இலங்கைத் தமிழர்களின் இரத்தம் சிந்திய வரலாறு முதன் முதலாக எழுதப்பட்டது.

தந்தை செல்வா விட்டுச் சென்ற இலட்சியப் பாதையைநாம் விட்டுவிலக முடியாது. மெதுவாக நடந்தார். மெதுவாகப் பேசினார்; ஆனால் இலட்சியத்தில் உறுதியாக வைரமாக இருந்தார்.

இந்நாட்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படாத வரை தமிழ் முஸ்லிம் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் நிம்மதியாக வாழமுடியாது. தற்போது நாம் ஆயுத கலாச்சாரத்தில் சிக்கித் தவிக்கின்றோம் — என்று கூறினார்.

நினைவுச் சொற்பொழிவுகளுக்கு முன்னர் தந்தை செல்வா அறங்காவற்குழு உறுப்பினர் எம். கே. ஜீவகதாஸ் வரவேற்புரை நிகழ்த்தினார். யாழ். மாநகரசபை

(9 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் கட்சிகள் ஒன்றுபடுவதற்கு மக்கள் அழுத்தம் கொடுக்கவேண்டும்

## மாணிக்கதாசன் வலியுறுத்து

மன்னார், ஏப். 2

சகல தமிழ் அரசியல் அமைப்புகளும் ஒரே தலைமையின் கீழ் ஒன்றுபடுவதற்கு தமிழ் மக்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

மன்னாரில் நேற்று முன்தினம் தந்தை செல்வாவின் சிலையைத் திறந்து வைத்து உரையாற்றிய 'புளொட்' அமைப்பின் உப தலைவர் என். மாணிக்கதாசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

தந்தை செல்வாவின் நூற்றாண்டுத் தினத்திலிருந்தாவது இந்த அழுத்தத்தைக் கொடுக்க தமிழ் மக்கள் முன்வர வேண்டும்.

தமிழ்மக்களுக்கென ஒன்றுபட்ட, சக்திமிக்க தலைமையில்லாத நிலையை நீக்கும் பாரிய பொறுப்பு தமிழ் மக்களின் கைகளிலே உள்ளது.

இந்த ஒற்றுமை இன்று கூடா விட்டாலும் என்றோ ஒரு நாள் கை கூடத்தான் வேண்டும்.

தந்தை செல்வா இன உணர்வுடன் செயற்பட்டதால் எல்லா சக்திகளையும் ஐக்கியப்பட வழிவகுத்தார். பின்னர் வந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைகள் இன வெறியுடன் போராட்டத்தை முன் எடுத்துச் சென்றதால் ஐக்கியத்தைக் கட்டிக்காக்க முடியவில்லை.

கூட்டணியின் இன்றைய தலைமையினால் கூட்டணியின் இளைஞர், மாணவர் அமைப்புக்கள் எல்லாம் சிதைந்து போயின. இதனால் இளைஞர் சமூகம் பிரிந்து நிற்கிறது — என்றும் தெரிவித்தார்.

மன்னார் ஆயர் வந். இராயப்பு யோசப் பேசுகையில் —

ஐக்கியமான முறையில் போராட்டம் நடத்திய தந்தை செல்வாவின் வழியில் இன்று பிரிந்து நிற்கும் சகல தமிழர்களும் ஒன்றுபட வேண்டும் — என்று கேட்டுக்கொண்டார்

(ஐ-5-3)

# உதயன்

## மறைமுக ஆதரவா?

தென்னிலங்கையில், நாளாந்தம் தமிழர் வாழும் பகுதிகள், இரவு வேளைகளில், படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு, நித்திரைப்பாயில் இருந்து மக்கள் தட்டி எழுப்பப்பட்டுக்கைது செய்யப்படுகிறார்கள். 24 மணித்தியாலங்களுக்கு மேல் உடுத்த உடுப்புடன் தடுத்து வைக்கப்பட்டு, பலவகை உள, உடல் இம்சைகளுக்கு ஆளாக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்படுகின்றனர்.

ஐந்துபேரைக் கைதுசெய்வதற்காக ஐயாயிரம் பேர் சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். பால், வயது, நோய், மூப்பு வேறுபாடின்றி இக் கைதுகள் சோதனைகள் நடத்தப்படுகின்றன. ஏதோ ஒரு பகுதியில் தமிழர்கள் கைது என்ற செய்தி இன்றிப் பத்திரிகைகள் இல்லை.

தமிழர்கள் என்ற ஒரேயொரு காரணத்துக்காக, மனிதாபிமானமோ, மனித நேயமோ இன்றி அவர்கள் இந்தளவுக்குக் "கிரிசுகெடுத்த"ப்படுகிறார்கள். தட்டிக் கேட்க எவருமில்லை என்ற காரணத்தால் அரசாங்கமும், படையினரும் இதனை ஒரு சிறிய விளையாட்டாகக் கருதுகிறார்கள். பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன் போகிறது என்ற நிலையே இது!

சுற்றிவளைப்பு, இரவுத் தேடுதல், கைதுகளால் பாதிக்கப்பட்ட மக்கள் அரசாங்கத்துக்கு — ஜனாதிபதி வரை — மகஜர்கள், கடிதங்கள் எழுதி எவ்வித பயனும் இல்லை. களைத்துப் போனார்கள்; சலித்து விட்டார்கள்.

கொழும்பு வாழ் தமிழ் மக்கள் — அமைப்புகள் — இப்போது இந்த விடயத்தை இந்தியத் தூதரிடமும், இந்தியப் பிரதமரிடமும் முறையிட்டு நிவாரணம் தேட முயல்கிறார்கள்.

இத்தனைக்கும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகளிடம் இந்தக் கெடுபிடியை அடித்து வீழ்த்த ஆயுதம் இருந்தும் அதனை அவர்கள் தொடப் பயப்படுகிறார்களே.

அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மாதாந்தம் நாடாளுமன்றத்துக்கு வருகிறது. 27 தமிழ் எம். பிக்களும் ஒரு முறையாவது அதற்கு எதிராக வாக்களித்து அது நிறைவேறாமல் முட்டுக்கட்டை போடலாம் அல்லவா? அவ்வாறு செய்து அரசை இடுக்கிவிட அவர்கள் இன்னமும் செயலாற்றாது முன்வராது இருப்பது ஏன்?

மீனுக்குத் தலையும் பாம்புக்கு வாலும் காட்டும் விலங்குப் புத்தி இவர்களிடமிருந்துபோகாதா? இந்த மாதம் மீண்டும் அவசர கால சட்ட நீடிப்புப் பிரேரணை சபைக்கு வரும் போதாவது இவர்கள் உறக்கத்தில் இருந்துவிழித்துக் கொள்வார்களா? இல்லையெனில் தமிழ் எம். பிக்களும் கைதுக் கொடுமைக்கு மறைமுக ஆதரவு கொடுக்கிறார்கள் என்பதே அர்த்தம்! வேறெந்தக் காரணமும் ஏற்றுக் கொள்ள முடியாதது.

தமிழர்கள் என்ற வகையில் இவர்களுக்கு மானம், ரோசம் என்று ஏதாவது இருக்கிறதா என்று அறிவதற்கு அவலப்படும் மக்கள் ஆத்திரம் பொங்க எதிர்பார்த்து நிற்கிறார்கள்!

### உதயவகக்கு

மற்றவர்களுடைய துயரங்களைக் கண்டு இரக்கப்படுங்கள். ஆனால் உங்களுடைய சொந்தக் கஷ்டங்களை உங்களிடமே வைத்திருங்கள்.

ஆக்டன் பிரபு


## யாழ். வண்ணை. வைத்தீஸ்வரன் மகோற்சவ சிறப்பம்சம்

### அருள் பொழிந்திருவார்

எண்ணிய வரம் வழங்கும்
வண்ணை நகர் வைத்தீஸ்வரர்
கண்ணை இமை காப்பது போல்
எம்மையெல்லாம் காத்திருந்து
திண்ணமாகத்தினமும் இங்கு
தீராக்குறை தீர்க்கவென
நண்ணிடும் அன்பர்க்கெல்லாம்
நயந்தே அருள் சொரிந்திடுவார்.

கே. சிவசுந்தரமூர்த்தி

(இன்று வியாழக்கிழமை - பதினொராம் திருவிழா)


### சாயி சிந்தனை

திருமணத்திற்கு முன் மனைவி யார்? கணவன் யார்? ஆனால் திருமணத்திற்குப் பின் இவள் எனது மனைவி என்கிற அபிமானம் ஏற்படுகிறது.

பிறப்பதற்கு முன் தாய் யார்? பிள்ளை யார்? பிறந்த பிறகு இது என் குழந்தை என்கிறோம்!

இவையெல்லாம் நமக்கு நாமே கற்பித்துக் கொண்டவை. இவை நமக்குள் உருவாகும் உறவு முறைகள். இவற்றை விட்டால் வேறெந்த சம்பந்தமும் கிடையாது. உள்ளே இருக்கும் ஆத்மா சம்பந்தம் மட்டும் தான் இருக்கிறது.

[ஆதாரம்: சனாதன சாரதி]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் அகதிகளைக் கப்பல் மூலம் புங்குடுதீவு அனுப்ப ஏற்பாடு செய்க

## படை அதிகாரியிடம் கோரிக்கை

மன்னார், ஏப். 2

மன்னார்— புங்குடுதீவுக்கு இடையே கப்பல் சேவை நடத்தி மன்னாரில் உள்ள அகதிகளை யாழ்ப்பாணம் அனுப்பஏற்பாடு செய்யவும்— அல்லது மன்னாரில் முகாம் அமைத்து அந்த அகதிகளை அங்கு வைத்துப் பராமரிக்கச் செலவிடும் பணத்தைப்பயன் படுத்தி, அவர்களை விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டும்.

''புளொட்'' உபதலைவர் என். மாணிக்கதாசன் மன்னார் மாவட்ட இராணுவ அதிகாரி பிரிகேடியர் காமினி ஜயசுந்தரவிடம் இவ்வாறு நேரில் கேட்டுள்ளார்.

மன்னார் இராணுவ அலுவலகத்தில் நேற்று முன்தினம் பிரிகேடியரை சந்தித்த போதே இக் கோரிக்கையை அவர் விடுத்தார். மன்னாரில் இரண்டு இலட்சம் அகதிகளைத் தங்க வைக்க முகாம்களை அமைக்கும் திட்டத்தை கைவிடுமாறு மாணிக்கதாசன் பிரிகேடியரிடம் கேட்டுக் கொண்டார். (உ-3)

## படையணி செல்லவிருந்த வீதியில் சைக்கிள் குண்டு!

மட்டக்களப்பு, ஏப். 2

மட்டக்களப்பு நகரில் திங்கள் காலை 10.45 மணிக்கு சைக்கிள் குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

மட்டக்களப்பு — பொலநறுவை இராணுவ வாகனத் தொடர் அணி புறப்படச் சிறிது நேரம் முன்பாக இச் சம்பவம் இடம்பெற்றது.

வீதிக் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலீஸாரால் குண்டு பொருத்தப்பட்ட சைக்கிள் கண்டு பிடிக்கப்பட்டு அதிலிருந்த குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டது. (ஐ-21)

## ஆலயப் புனரமைப்பு பூர்த்தி

அரியாலை ஏப்ரல் 2

ஈச்சமோட்டை கலட்டிப் புலம் வைரவர் ஆலயத்தின் கட்டட புனரமைப்பு வேலைகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன.

கட்டட புனரமைப்பு வேலைகள் முடிவுற்றதும் எதிர்வரும் மே மாதம் அளவில் மஹாகும்பாபிஷேகத்தை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன' (ஐ-17)

## புனரமைப்புக் கூட்டம்

சண்டிப்பாய், ஏப்ரல் 2

மாவிட்டபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புனரமைப்புக் கூட்டம் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இணுவில் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற வுள்ளது. (ஐ-135)

## இருவர் மரணம்

வவுனியா, ஏப்ரல் 2

கிளிநொச்சிப் பகுதியில் கடந்த 28ஆம் திகதி இராணுவத்துடன் இடம்பெற்ற மோதலில் சுடர்சூதன் அல்லது ஐங்கரன்(துரைரத்தினம் சிவகுமார்) - யாழ்ப்பாணம் என்பவரும்—

மட்டக்களப்பு கதிரவெளிப் பகுதியில் ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தில் கப்டன் அலகின் (மயில்வாகனம் குணசீலன்) — யாழ்ப்பாணம் என்பவரும் — மரணமடைந்ததாக ''புலிகளின் குரல்'' தெரிவித்தது. (ஐ-3-ரீ)


### கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளராகிய

அமரர் சுப்பிரமணியம் இரத்தினராசா

அவர்கள் 30-03-1998 திங்கட்கிழமை காலமானதையிட்டு நாம் அதிர்ச்சி அடைவதுடன், ஆழ்ந்த கவலையுடன் எமது கண்ணீர் அஞ்சலிகளையும் செலுத்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/பாஷையூர் சென்.அன்ரனீஸ் றோ.க.
மகளிர் வித்தியாலயம்.

(54533)

### விழிநீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களம் வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளர் பாசமிகு

அமரர் சு. இரத்தினராசா

அவர்கள் 30—03— 98 இல் மீளாத்துயில் கொண்டதையிட்டு நாம் ஆறாத்துயருறுகின்றோம். அவருக்கு எமது விழிநீர் அஞ்சலியையும் அன்னாரது பிரிவினால் துயருறும் அவர் குடும்பத்தவர்களுக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் காணிக்கையாக்குகின்றோம்.

யா/ கன்னியர்மடம் மகாவித்தியாலய
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(54530)

### கண்ணீர் அஞ்சலி

பாசமிகு

அமரர் சு. இரத்தினராசா

(கல்விப் பணிப்பாளர், யாழ். வலயம் - 01)

தமிழ்ப் பகுதிகளில் சாரண தருசின்னம் பெற்ற நிரந்தர ஆசிரியர்கள் கல்விப் பகுதியில் இல்லாத குறையை நிவர்த்தி செய்ய கூடுதலான சாரண தலைவர்கள் பயிற்சிகளை நடத்த ஊக்கம் கொடுத்தும், சாரண, சாரணீயப் பிரிவு, முதலுதவிப் படைப்பிரிவு ஆகியவற்றை சகல பாடசாலைகளிலும் ஆரம்பிக்க வேண்டுமென்ற ஆவலுடன் தொழிற்பட்ட யாழ். கல்வி வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளர்

அமரர் சுப்பிரமணியம் இரத்தினராசா

அவர்களுக்கு ஆழ்ந்த கவலையுடன் எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்.

இவரது பிரிவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினருக்கும் எமது எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சகல சாரணத் தலைவர்கள், சாரணத் தலைவிகள், சாரணர்கள், முதலுதவிப் படைப்பிரிவினரும் தத்தம் சீருடையில் யாழ்ப்பாணம் கல்வி வலயம் – 01 இல் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பின்பும் அன்னாரது கொக்குவில் இல்லத்தில் ஞாயிறு காலை 8-00 மணிக்கும் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மாவட்ட ஆணையாளர்
திரு. மா. புவனேந்திரன்
கிளிநொச்சி - தென்மராட்சி பளை.

மாவட்ட ஆணையாளர்
திரு. எஸ். செல்வறஞ்சன்
முதலுதவிப்படைப் பிரிவு,
யாழ்ப்பாணம்.

### கண்ணீர் அஞ்சலி

5-வது தேசிய சாரண ஜம்போறியில் நாம் பங்குபற்ற முன்னின்று அயராது உழைத்து ஊக்கமும் ஆக்கமும் தந்துதவிய

அமரர் சு. இரத்தினராசா

(கல்விப் பணிப்பாளர், யாழ். வலயம்-01)

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அவரது குடும்பத்தவருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

5ஆவது தேசிய ஜம்போறியில் பங்கு பற்றிய

சாரணர் பிரிவு:
குழுத் தலைவர்கள்,
உதவிக்குழுத் தலைவர்கள்,
சாரண தலைவர்கள், சாரணர்கள்.

குருளைச்சாரண தலைவிகள் பிரிவு:
குழுத்தலைவர், உதவிக்குழுத் தலைவர்,
குருளைச் சாரணர் தலைவிகள்,
சாரணியர்.

கிளிநொச்சி மாவட்ட சாரணர் கிளைச் சங்கம்
தென்மராட்சி, பளை,
சாரண உத்தியோகத்தர் வலயம் - 01.

(54524)

மூத்த விநாயகர் கோயிலடியில்

### உள்நாட்டு, வெளிநாட்டு

தொலைத் தொடர்புகளுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்:

"ஐயர் வளவு"
மூத்த விநாயகர் கோயிலடி,
கரணவாய்.
T. P. NO. 070 — 212226

[54489]

### நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 12 — 10 — 1932

மறைவு: 01 — 04 — 1994

அமரர் முத்துச்சாமி இராசரத்தினம்
(செயலாளர், வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி)

திதி: 02-04-1998

அன்பு ஐயாவே!
நான்கு ஆண்டுகள் ஓடினவே; ஆனாலும்
உங்கள் நினைவுகள் எம் மனதை விட்டு
அகலவில்லை. பாசமும், பரிவும் காட்டி
எம்மை வளர்த்து வாழ வைத்த தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி சுகிர்தாம்பாள்,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இராசரத்தினம்,
''அன்பகம்''
சிறுப்பிட்டி மத்தி,
நீர்வேலி.

(54486)

### திருமறைக் கலாமன்றம்
CENTRE FOR PERFORMING ARTS

பெருமையுடன் வழங்கும் Presents

### சிலுவைச் சுவடுகள்

திருப்பாடுகளின் காட்சி PASSION PLAY

1998 ஏப்ரல் 04 (சனி) 05 (ஞாயிறு)

பிரவேசம்: இலவசம் இருதினங்கள் மட்டும்

மட்டுப்படுத்தப்பட்ட ஆசனங்கள் மட்டுமே உள்ளதால் ஆசனம் விரும்புவோர் முன்னதாகவே அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளவும்.

முக்கிய கவனிப்பு: காட்சி முடிந்து மக்கள் வீடு செல்வதற்கு வசதியாக மேற்குறிப்பிட்ட தினங்களில், யாழ். உதவி அரசாங்க அதிபரின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மட்டும், ஊரடங்குச் சட்டம் இரவு 10 மணிவரை தளர்த்தப்பட்டிருக்கும் என்பதை அறியத்தருகின்றோம்.

V. J. கொன்ஸ்ரன்ரைன்
பொதுச் செயலர்

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3279)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 மாதத்துக்கு தேவையான மருந்து ஆஸ்பத்திரியில் இருப்பில்வைக்க முடிவு

## மாநாட்டில் தீர்மானம்

அரியாலை, ஏப். 2

யாழ்.ஆஸ்பத்திரியில் அடிக்கடி ஏற்படும் மருந்துத் தட்டுப்பாட்டை நீக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன. அடுத்த மாதம் முதல் மூன்று மாத காலத்துக்குத் தேவையான மருந்து வகைகள் ஆஸ்பத்திரியில் களஞ்சியப்படுத்தப்படும்.

யாழ்ப்பாண ஆஸ்பத்திரி நிலைமை தொடர்பாக கொழும்பில் கூட்டப்பட்ட மாநாட்டில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி கிருகாம்பிகை பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில் யாழ். நகர படைத் தளபதி மற்றும் கட்டடத் திணைக்களப் பிரதம பொறியியலாளர், யாழ். ஆஸ்பத்திரிப் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகஸ்தர், மற்றும் சுகாதார அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இம் மாநாட்டில் ஆஸ்பத்திரியின் தேவைகள் குறித்து பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன:

ஆஸ்பத்திரியில் சேதமடைந்த கட்டடப் பகுதிகள், வார்ட்டுக்கள், ஆய்வுகூடப் பகுதி, தாதியர் பயிற்சிக் கல்லூரி போன்றவற்றை புனரமைப்புச் செய்வது குறித்தும் தீர்மானிக்கப்பட்டது.

ஆஸ்பத்திரியில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறை மற்றும் வைத்திய உபகரணங்களின் தேவை குறித்தும் மாநாட்டில் எடுத்துக் கூறப்பட்டது.

இம் மாநாட்டில் பங்குபற்றி விட்டு ஆஸ்பத்திரிப் பணிப்பாளரும், நிர்வாக உத்தியோகஸ்தரும் நேற்று முன்தினம்செவ்வாய்கிழமை மாலை யாழ். திரும்பினர். (ஐ–17)

## நினைவலைகள் வெறும் நீரலைகள் அல்ல

யாழ். கல்வி வலயம் I இன்
கல்விப் பணிப்பாளராக
இருந்து கல்வி உலகிற்கு அளப்பரிய சேவையாற்றிய

**அமரர் சுப்பிரமணியம் இரத்தினராசா**

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கோட்டக் கல்வி அலுவலர்,
பணியாளர்கள்,
சே. கா. ஆலோசகர்கள்.

கோட்டக்
கல்வி அலுவலகம்,
சாவகச்சேரி.

(சி/3284)

## கண்ணீர் அஞ்சலி

எங்கள் கல்விப் பணிப்பாளராக இருந்து தீவகத்திற்கு பெருமைதந்து இன்று எம்மைவிட்டு மறைந்த

**அமரர் சு. இரத்தினராசா**

அவர்களின்பிரிவு குறித்து வருந்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவித்திச் சங்கம்,
யா / புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம்,
புங்குடுதீவு.

(54540)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளராக இருந்து
கல்வியுலகிற்கு அரும்பெரும் சேவையாற்றிய
கல்விப் பணிப்பாளர்

**அமரர் சு. இரத்தினராசா**

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது கண்ணீர்ப் பூக்களைக்காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
அபிவிருத்திச் சங்க உறுப்பினர்.
யா/ நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை.

(54544)

## கண்ணீர் அஞ்சலி

எங்கள் கல்விப் பணிப்பாளராக இருந்து அரிய சேவைகள் பல ஆற்றி இறைவனடி சேர்ந்த

**அமரர் சுப்பிரமணியம் இரத்தினராசா**

அவர்களது மறைவு கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

யாழ்/ சென். ஜேம்ஸ்மகளிர் பாடசாலை,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3286)

## துலாவின் சுவர் இடிந்து விழுந்து ஒருவர் காயம்

யாழ்ப்பாணம் ஏப். 2

விமானக் குண்டு வீச்சு, ஷெல் வீச்சுக்களினால் அதிர்ந்து கிடந்த சுவர்கள் இடிந்து விழுந்ததில் சுவர்களின் இடிபாடுகளுக்கிடையில் அகப்பட்டு ஒருவர் படுகாயமடைந்தார்.

சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் நல்லையா தயாபரன் (வயது 41) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

கிணற்றில் நீர் அள்ளுவதற்காக பாவிக்கும் துலாவைத் தாங்கி நின்ற சுவர்களே இடிந்து விழுந்தன.

படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ–15)

## வடக்கு கிழக்கு...

(ஏழாம் பக்கத் தொடர்)

உதவிமேஜர் நாவேந்தேன், உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம், யாழ். மத்திய கல்லூரி அதிபர் க. இராசதுரை ஆகியோரும் உரையாற்றினார்கள்.

தந்தை செல்வா நினைவுத் தூபியில் அன்று காலை மத குருமார்களினால் பிரார்த்தனை உரைகள் நிகழ்த்தப்பட்டன.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தபரமாச்சாரிய சுவாமிகள் அங்கு உரையாற்றும் போது —

தமிழினம் மீண்டும் இந்த மண்ணில் தலை நிமிர்ந்து நிற்பதற்காக இந்த நூற்றாண்டு நிகழ்வு கொண்டாடப்படுகிறது. தந்தை செல்வாவின் இலட்சியக் கனவை இறைவன் விரைவில் நிறைவேற்றித்தர வேண்டும் — என்று தெரிவித்தார்.

கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த அருட்திரு. சவரிமுத்து அடிகளார் உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:–

ஈழமண்ணிற்கு தந்தை செல்வாவை தலைவராக, வழி காட்டியாக, கலங்கரை விளக்காக, விடி வெள்ளியாக இறைவன் அனுப்பி வைத்துள்ளார் — என்று தெரிவித்தார்.

முஸ்லிம்கள் சார்பில் ஜனாப்சாகுல் ஹமீட் உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:–

தந்தை செல்வா மதவேறுபாடுகளை மறந்து சகல தமிழ் பேசும் மக்களும் ஒன்றாக வாழ வேண்டும் என்பதற்காகத் தனது வாழ்வை அர்ப்பணித்தவர். அவர் முஸ்லிம் மக்களுக்காகக் குரல் கொடுத்தவர். சமாதானம் மீண்டும் ஏற்பட்டு நாங்கள் யாழ். மண்ணுக்குத் திரும்பி வந்து தமிழ் மக்களுடன் ஒற்றுமையாக வாழும் நிலை யேற்பட வேண்டும் என்பதே எமது விருப்பம் — என்று தெரிவித்தார். (ஐ–5)

## புலிகளுக்கு உதவ வேண்டாம் என படை வட்டாரங்கள் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஏப். 2

புலிகளுக்கு உதவ வேண்டாம் எனவும் அவர்களது அறிவுறுத்தல்களைச் செயற்படுத்த வேண்டாம் எனவும் அரச ஊழியரையும், வர்த்தகர்களையும், மற்றையோரையும் எச்சரித்து பலாலி படைத் தரப்பு செய்திக் குறிப்பு ஒன்றை அனுப்பி உள்ளது.

அதன் விவரம் வருமாறு:–

பாதுகாப்புப் படையினரின் எச்சரிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களின் மத்தியிலும் சிலர் புங்குடுதீவு சென்று விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த தூயவனைச் சந்தித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பின் போது அவரிடம் இருந்து அறிவுறுத்தல்களைப் பெற்றதுடன் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகளுக்கு உதவுவதற்கும் அவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அரசின் சமாதான முயற்சிகள் மற்றும் புனரமைப்புத் திட்டங்களைக் குழப்புவதே புலிகளின் நோக்கம். அவர்களது எதிர்கால நோக்கங்கள் குறித்து பாதுகாப்பு வட்டாரங்கள் நன்கு அறிந்து வைத்துள்ளன.

யாழ்ப்பாண மக்கள் வன்செயல்களை விரும்பமாட்டார்கள் என்பது நிச்சயம். அத்துடன் குடிமக்கள் துன்புறுத்தப்படுதல், சிறுவர் கட்டாயமாகத் திரட்டப்படுதல் ஆகியவற்றையும் அவர்கள் விரும்பமாட்டார்கள்.

புலிகளுக்கு உதவுவது மூலமோ அல்லது புலிகளின் அறிவுறுத்தல்களைச் செயற்படுத்துவது மூலமோ யாழ்ப்பாணத்தில் பிரச்சினையை உருவாக்கவேண்டாம் என்று நாம் உங்களுக்கு ஆலோசனை தெரிவிக்கின்றோம்.

புலிகளுடன் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது என்ற எமது அறிவுறுத்தலை மீறும் அரச ஊழியர்கள், வர்த்தகர்கள் மற்றும் மற்றையோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் பாதுகாப்புப் படையினருக்கு ஏற்பட்டுள்ளது— என்றுள்ளது. (இ)

## விறகு வெட்ட சென்றவர் மிதி வெடியில்

யாழ்ப்பாணம், ஏப். 2

விறகு வெட்டச் சென்ற இடத்தில் மிதிவெடியில் சிக்குண்டு ஒருவர் இடதுகாலை முழங்காலுக்குக் கீழ் இழந்தார்.

புன்னாலைக் கட்டுவன் வடக்கு அற்பைச் சந்திப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் வயாவிளான் சுதந்திரபுரத்தைச்

(10ஆம் பக்கம் பார்க்க)

உ

சாவகச்சேரி - கல்வயல் - பெருங்குளம்

அருள்மிகு

## அம்பலவாண வீரகத்தி விநாயகர்

தேவஸ்தானம்

## மகாகும்பாபிஷேக திவ்விய விழா

யாகாரம்பம்:
01-04-1998 புதன் மாலை 4-00 மணி

எண்ணெய்க்காப்பு:
இன்று (02-04-98) வியாழக்கிழமை
காலை 8-00மணி முதல் மாலை 4-00மணி வரை

மகாகும்பாபிஷேகம்:
03-04-1998 வெள்ளி பகல் 10-20 மணி

பிரதிஷ்டா குரு:
''சித்தாந்த பண்டிதர்''
சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள்
(புன்னாலைக்கட்டுவன்)

அனைவரும் வருக. அருள் பெறுக.

– ஆலய பரிபாலன சபை.

விழா சிறப்புற வாழ்த்துவோர்:

**சாரங்கா நகை மாடம்,**
177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**அருள்முருகன்**
நகையகம்,
96/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**சிவா**
நகைமாடம்,
கண்டி வீதி,
சாவகச்சேரி.

(சி/3289)

உ

## நன்றி நவிலல்

எனது "மஹாவித்துவான்"

கௌரவ பாராட்டுப் பட்டமளிப்புப் பெருவிழா மிகுந்த வெற்றிகரமாகச் சிறப்புற **29 - 03 - 98** அன்று நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற ஒத்துழைப்புத்தந்த அனைவருக்கும் எனது நன்றியை இத்தால் மிகுந்த பணிவோடு தெரிவிக்கிறேன்.

வணக்கம்!

''மஹாவித்துவான்''
யாழ்ப்பாணம் இணுவில்,
பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணி ஐயர்.

(54523)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டையொட்டி பல்வேறு நிகழ்வுகள்

தமிழ் — சிங்கள புத்தாண்டை யொட்டி நல்லிணக்கத்துக்கும், உறுதிக்குமான பல்வேறு நிகழ்ச்சிகளை 512 ஆவது பிரிக்கேட் யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்துள்ளது.

விளையாட்டு, கலை, கலாசார நிகழ்ச்சிகளை எதிர்வரும் 4 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களிடையே கலை நிகழ்ச்சிகள், பாண்ட் போட்டி, சித்திரக் கண்காட்சி, சைக்கிளோட்டம், மரதன் ஓட்டம், கூடைப்பந்தாட்டம், கிரிக்கெட், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், மெய்வன்மைப் போட்டி ஆகியன இக் காலப் பகுதியில் நடத்தப்படும்.

5 ஆம் திகதி காலை 9.30 மணி முதல் பிற்பகல் 4. 30 மணி வரை யாழ். சென் ஜேம்ஸ் வித்தியாலயத்தில் கண்காட்சி நடைபெறும்.

விவசாய, பனை, கைப்பணி, சிறு கைத்தொழில் ஆகிய துறை சார்ந்ததாக இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கண்காட்சியில் பெண்கள் அபிவிருத்தி நிலையமும் பங்குபற்றும். பெண்களின் கைப்பணி உற்பத்திகளும் கண்காட்சியில் இடம் பெறும்.

6 ஆம் திகதி கலை நிகழ்ச்சிகள் வேம்படி மகளிர் கல்லூரியில் காலை 9–30 மணி முதல் பிற்பகல் 2–30 மணி வரை நடைபெறும். அதே தினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நண்பகல் 12–30 மணி முதல் பிற்பகல் 4–00 மணி வரை பாடசாலைகள் மத்தியிலான பாண்ட் வாத்தியப் போட்டி இடம் பெறும்.

7 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரியில் சித்திரக் கண்காட்சி காலை 9-00 மணி முதல் மாலை 4–30மணிவரை இடம்பெறும். (இ-3)

# சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, ஏப், 2

தேவரையாளி கண்ணகை அம்மன் கோயிலில் கும்பாபிஷேகத்தை ஒட்டிய எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இன்று வியாழன் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை நடைபெறவுள்ளது. கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணி முதல் இடம் பெறும். (ஐ-30)

★ ★ ★

கோப்பாய் தெற்கு அருள்மிகு மாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று புதன்கிழமை ஆரம்பமாகியது. எதிர்வரும் 10 ஆம் திகதி வரை உற்சவம் நடைபெறும். (ஐ–5)

★ ★ ★

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலய வருடாந்த பங்குனி உத்தர இலட்ச அர்ச்சனையும், விசேட திரவ்விய ஹோமமும் கடந்த 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை காலை 64 உபசார விசேட பூசை வழிபாட்டுடன் இலட்ச அர்ச்சனை நிறைவு பெறும்.

சங்காபிசேகமும், அன்னதானமும் எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெறும், (ஐ–30)

★ ★ ★

யாழ். குடாநாட்டில் உள்ள பெரும்பாலான கிறிஸ்தவ தேவாலயங்களில் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை குருத்தோலை ஞாயிறு தினம் பூசை வழிபாடுகளுடன் நடைபெறவுள்ளது. (ஐ-30)

★ ★ ★

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் தொண்டமனாறு அருள்மிகு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும். வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆசிரியர் கு. மனோகரன் ''மனமே முருகனின் மயில்வாகனம்'' என்ற தலைப்பில் சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

இந்நிகழ்விற்கான அறிமுக வுரையை இளைப்பாறிய தபால் அதிபரும், பேரவையின் தலைவருமான சு. திருப்பரங்கிரிநாதன் வழங்குவார். (ஐ–30)

★ ★ ★

கொக்குவில் திருவருள்மிகு வள்ளிதேவசேனா சமேத கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி (புதுக்கோயில்) ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேக ஆரம்பக் கிரியைகள் எதிர்வரும் திங்கள் முதல் நடைபெறும்.

கும்பாபிஷேகக் கிரியைகளை மேற்படி தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ க. சிவதாசக்குருக்கள் நடத்தி வைப்பார். (ஐ–7)

★ ★ ★

சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம் அருள்மிகு அம்பலவாண வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மகா கும்பாபிஷேக பெருவிழா நாளை வெள்ளி காலை 10.15 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

இதனையொட்டி இன்று வியாழன் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் நடைபெறும்.

இக்கும்பாபிஷேக விழா சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ–31)

★ ★ ★

இளவாலை புனித வியாகுல அன்னை ஆலயத்தில் தபசுகாலத்தின் ஆறாவது கிழமையின் விசேட ஆயத்த வழிபாடுகள் நாளை காலை 7 மணி முதல் திருப்பலியுடனும், மாலை பெரிய சிலுவைப்பாதையுடனும் இடம் பெறும். [இ–3]

# மீண்டும் கருகதி பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஏப். 2

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் வரையிலான கடுகதி பஸ்சேவை மீண்டும் நேற்று முதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

காலை 7.00 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து புறப்படும் இந்த பஸ் வல்லை ஆவரங்கால் வீதியூடாக முத்திரைச் சந்தியை அடைந்து கச்சேரியடி வழியாக யாழ். பஸ் நிலையத்தை 8.15 மணிக்குச் சென்றடையும். (இ–15)

## விறகு வெட்ட...

(ஒன்பதாம் பக்கத் தொடர்)

சேர்ந்த தம்பிஐயா பாலசுப்பிரமணியம் (வயது43) என்பவரே கால் இழந்து படுகாயமடைந்தவராவர்.

படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (இ–139–15)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் , 2–04–1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# புலிகளுக்கு சொந்தமான கப்பல்களின் விவரம் அறிய இலங்கை முயற்சி

## சர்வதேச பொலீஸாரின் உதவியை நாடியது

கொழும்பு, ஏப். 2

விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான 9 கப்பல்கள் பற்றிய விவரங்களை அறிவதில் சர்வதேச பொலீஸாரின் உதவியை இலங்கை அரசு நாடியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது,

விடுதலைப் புலிகளின் கப்பல்கள் தொடர்பாக ரகசியப் பொலீஸார் தனியான விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரிய வருகிறது.

விடுதலைப் புலிகளுக்குத் தேவையான ஆயுதங்கள், உபகரணங்கள் மற்றும் பொருள்களை வெளிநாடுகளில் இருந்து ஏற்றிவருவதற்கும் வருமானம் பெறும் நோக்கிலும் விடுதலைப் புலிகள் அமைப்பு 11 கப்பல்களைக் கொண்ட வர்த்தகக் கப்பல் சேவையைக் கடந்த காலத்தில் நடத்தி வந்தது எனவும் —

அக்கப்பலில் 2 அழிக்கப்பட்டு விட்டன எனவும் — ரகசியப் பொலீஸார் தெரிவிக்கின்றனர். (இ–10)

# திருமலையில் கிராம சேவையாளர் கைது

மட்டக்களப்பு, ஏப். 2

திருகோணமலையில் இரு கிராமசேவை அலுவலர்கள் பாதுகாப்புத் தரப்பினரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கியதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (இ-21)

# பணம் கூடலில் சிசுவின் சடலம்!

தெற்கு புன்னாலைக்கட்டுவன் சந்திக்கு அருகில் உள்ள பனம் கூடலொன்றிலிருந்து ''சொப்பிங் பாய்க்''கினால் சுற்றப்பட்ட நிலையில் தொப்பிள் கொடியுடன் அழகிய ஆண் சிசு ஒன்றின் சடலம் சுன்னாகம் பொலீஸாரினால் நேற்று முன்தினம் மீட்கப்பட்டது.

சிசுவின் சடலம் தொடர்பாக நீதிமன்றின் ஆணை கோரி பொலீஸார் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் நேற்று மனுவொன்றைத் தாக்கல் செய்தனர்.

இதனை விசாரித்த நீதிவான் மு. திருநாவுக்கரசு மரண விசாரணை நடத்தி பிரேதபரிசோதனை செய்த பின் சிசுவின் சடலத்தை அரச செலவில் அடக்கம் செய்யுமாறு உத்தரவிட்டார்.

இது தொடர்பாக பொலீஸார் தீவிர விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதிவான் பணித்தார்.

மேலதிக விசாரணைகள் ஏப்ரல் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

சிசுவின் சடலம் தற்போது யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. (இ–5)

# யாழ். பல்கலைக்கழகத்தில் தற்காலிக நியமனங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ். பல்கலைக்கழகத்தில் கடமையாற்ற தற்காலிக விரிவுரையாளர்களாகவும், கட்டுரையாளர்களாகவும் 75க்கும் மேற்பட்டோர் நேற்று நியமனம் பெற்றனர்.

பல்கலைக்கழகத்தில் நிலவும் விரிவுரையாளர்கள், கட்டுரையாளர்கள் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு யாழ் பல்கலைக் கழகத்தில் தமது பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்த மாணவர்களே இவ்வாறு நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் ஒவ்வொரு வருடமும் விரிவுரையாளர்களும் கட்டுரையாளர்களும் நியமிக்கப்பட்டு வந்த போதிலும் ஒரே தடவையில் 75க்கு மேற்பட்டோர் நியமனம் பெற்றது இதுவே முதல் தடவைஆகும் என தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இவர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கினார். (இ-9-ரி)

## படையினர்----

(முதலாம் பக்கத் தொடர்)

யாழ். மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இந்தவழக்கை விசாரணை செய்த யாழ். மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் சந்தேக நபர்களை தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன் ஏப்ரல் 15 ஆம் திகதி வரை வழக்கை ஒத்திவைத்தார். (இ-5)

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்)

ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆர். ராமமூர்த்தியும், ஆர். ராமேஸ்வரனும் நேற்று மாலை அனுருத்த ரத்வத்தவைச் சந்தித்து மேற்கண்ட கோரிக்கையை விடுத்தனர்.

பாதுகாப்பு அமைச்சில் நடந்த இச் சந்திப்பின் போது, கடந்த சில நாள்களாக தமிழர் கைதாகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று அவர்கள் சுட்டிக்காட்டினர்.

''பொலீஸ் நிலையங்களில் பதிவு செய்தவர்கள் கூட கைது செய்யப்படுகின்றனர். இந்த நடவடிக்கை தொடர்வதால் கொழும்பில் வாழும் தமிழர் மத்தியில் விரக்தி நிலை ஏற்பட்டுள்ளது.

பாதுகாப்பு என்ற போர்வையில் இடம்பெறும் இக் கைதுகள் அடிப்படை மனித உரிமை மீறல்களாகவும் அமைகின்றன.

ஆகவே இந்த கைதுகளை நிறுத்த மாற்றுத் திட்டம் ஒன்றை அமுல் செய்ய வேண்டும்''.

இப்படி அவர்கள் பிரதி அமைச்சிடம் கேட்டுக் கொண்டனர்.

இதற்குப் பதில் அளித்த பிரதி அமைச்சர், பாதுகாப்புக் கவுன்ஸிலின் அடுத்த கூட்டத்தில் இது தொடர்பாக ஆராய்வதாகத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் ஊடுருவல், குண்டுத் தாக்குதல்களைத் தடுக்கவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது என்று தெரிவித்த அமைச்சர், ஏற்கனவே கைதாகி விடுதலையானவர்களே குண்டு வெடிப்புக்களுடன் தொடர்பு கொண்டிருப்பதாகப் பொலீஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது என்றார். (இ–21-3)

## புத்தாண்டு---

(முதலாம் பக்கத் தொடர்)

செய்யப்பட்டு கரையோரப் பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு தலையாட்டி முன்னால் சகலரும் நிறுத்தப் பட்டு கடும் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

கைதானவர்களின் உறவினர்கள் அவர்களுக்கு உணவு கொடுப்பதற்காகவும், அவர்களை விடுவிப்பதற்காகவும் கரையோரப் பொலீஸ் நிலையம் முன்பாக நேற்றிரவு வரை காத்துக் கிடந்தனர்.

நேற்று முன்தினம் இதே போன்று தெகிவளைப் பகுதியில் பெருமளவில் தமிழர் கைதுசெய்யப் பட்டிருந்தனர். (இ-3-8-21)

## மீனவர்..

(முதலாம் பக்கத் தொடர்)

விரதப் போராட்டம் ஒன்றை கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொண்டனர்.

கடந்த 3 மாதங்களாக விதிக்கப்பட்ட இத்தடையால் அப்பகுதியைச் சேர்ந்த ஐம்பதுக்கு மேற்பட்ட மீனவ குடும்பங்கள் பட்டினிச் சாவை எதிர் நோக்கியுள்ளதாக தெரிவிக்கும் மகஜர் ஒன்று பொன்னாலை இராணுவ முகாம் பொறுப்பதிகாரியிடம் மீனவர்களால் கையளிக்கப்பட்டது.

கடற்றொழிலாளர் சங்கத்தினர் ஊர்வலமாகச் சென்றே இந்த மகஜரைக் கையளித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-30)

**Generator for Sale**
புத்தம் புதிய ஜெனரேட்டர் விற்பனைக்கு
DONGFENG
1 -- hr Rating
Out Put 9.7 KW/ 2000r/ Min
**A.C. Synchronous Generator**
Single Phase 50/ 60 Hz
KVA 1500/ 1800r/ Min
KWA 5
Made in China
Contact:
UTHAYAN,
361, Kasthuriar Road,
Jaffna.
(C/3258)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org